Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

யாழ்ப்பாணம் ... நூலகம்
- 6 APR 2004
மாநகர சபை
யாழ்ப்பாணம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

| WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம் |
|---|---|---|

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

(சி/2228)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 பங்குனி 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 15 (06.04.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:188

ஐ.நா.சபைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் பொங்குதமிழ் அரங்கு




ஐ.நா.வை நோக்கி நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.



# 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் திரண்டிருந்த ஐ.நாவை நோக்கிய 'பொங்கு தமிழ்' பேரணி!

## ஜெனிவா நகரில் புதிய வரலாறு

(ஜெனிவா)

**தமிழீழத் தனியரசை வலியுறுத்தி - ஐக்கிய நாடுகள் சபையை நோக்கி பல்லாயிரம் தமிழர் பங்கேற்ற பொங்கு தமிழ் பேரெழுச்சிப் பேரணி நேற்று நடைபெற்றது. ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் வருடாந்தக் கூட்டத்தொடர் ஆரம்பமாகிய சூழலில் நேற்று நடைபெற்ற இந்த பொங்கு தமிழ் நிகழ்வு ஜெனிவா மாநகரத்தையே அதிரவைக்கும் வகையில் அமைந்தது.**

ஐக்கிய நாடுகள் சபையின் முன்றலில் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்விற்கான ஊர்வலம் ஜெனிவா ரயில் நிலையத்தில் இருந்து ஆரம்பமானது.

ஊர்வலம் ஆரம்பமாகி 4 மணித்தியாலங்கள் கடந்த நிலையிலும் ஊர்வலம் ஆரம்பித்த இடத்தில் இருந்து மக்கள் கூட்டம் நகர்ந்த வண்ணமே இருந்தது.

ஜெனிவா மாநகர பொலிஸ் எதிர்பார்த்ததிலும் மேலாக நீண்டு சென்ற ஊர்வலத்தால் நகரின் பல பகுதிகளுக்கான போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது.

பல பகுதிகளிலும் ஜெனிவா நகரைக் கடப்பதற்கு காத்திருந்த வாகன சாரதிகளுக்கு, வாகனங்களின் இயக்கங்களை நிறுத்தி விட்டு இருக்குமாறு பொலிசார் அறிவுறுத்திக் கொண்டேயிருந்தனர்.

இதேவேளை பொங்கு தமிழ் நிகழ்வுக்காக ஒதுக்கப்பட்ட ஐக்கிய

## 13 ஆவது நாடாளுமன்றத்தில்

# சபாநாயகர் பதவி தந்தால் அரசுக்கு ஆதரவளிப்போம்

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கவுள்ள புதிய அரசில் தமக்கு சபாநாயகர் பதவியை வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமய கோரிக்கை விடுத்துள்ளது.

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் 9 ஆசனங்களை பெற்ற ஜாதிக ஹெல உறுமய புதிய அரசில் இணைவதற்கு தமக்கு நாடாளுமன்ற சபாநாயகர் பதவியை வழங்கவேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

நாடாளுமன்ற அவையில் இருக்கின்ற உறுப்பினர்களில் பௌத்த பிக்குகள் இருக்கின்றனர். சபாநாயகர் வரும் வேளையில் உறுப்பினர்கள் எழுந்திருந்து அவருக்கு மரியாதை செலுத்தும் பாரம்பரியம் இருந்துவரு

# 13 ஆவது நாடாளுமன்றத்தில் 36 ஜே.வி.பி உறுப்பினர்கள்!

நடந்துமுடிந்த 13 ஆவது நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் போட்டியிட்ட ஜே.வி.பி வேட்பாளர்கள் பெரு வெற்றி பெற்றிருக்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் சுமார் 20 மாவட்டங்களில் ஜே.வி.பி 39 வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. இவர்களில் 36 பேர் அதிகூடிய விருப்பு வாக்குகளுடன் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

வன்னி, திருகோணமலை, பதுளை ஆகிய மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்ட அனைத்து ஜே.வி.பி வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக்கின்றனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இதேவேளை பொங்கு தமிழ் நிகழ்வுக்காக ஒதுக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் முன்னுள்ள மைதானம் சனத்திரளை உள்ளடக்கப் போதுமானதாக இல்லாத கார

(12 ஆம் பக்கம் பார்க்க)

குகள் இருக்கின்றனர். சபாநாயகர் வரும் வேளையில் உறுப்பினர்கள் எழுந்திருந்து அவருக்கு மரியாதை செலுத்தும் பாரம்பரியம் இருந்துவருகின்றது.

எனவே, சாதாரண ஒருவருக்கு பௌத்த பிக்கு எழுந்து மரியாதை செலுத்துவது பௌத்த மதத்தை அவமதிப்பது போன்றது.

இந்த நிலையில், பௌத்த பிக்கு ஒருவரை (12 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ; தமிழரென்பதால் கதிர்காமர் 'அவுட்'!



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி சந்திரிகாவினால் நேற்றிரவு நியமிக்கப்பட்டார். இவர் இன்று காலை 10.10 மணிக்கு பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட நேர கலந்துரையாடல்களின் பின்னர், எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிய 58 வயதான, மஹிந்த ராஜபக்ஷவை, புதிய பிரதமராக ஜனாதிபதி சந்திரிகா அறிவித்தார்.

லக்ஸ்மன் கதிர்காமரையே புதிய பிரதமராக நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா முயற்சித்த போதிலும், மஹிந்த கொடுத்த கடுமையான அழுத்தம் காரணமாகவும், அவர் ஒரு பௌத்த சிங்களவர் என்ற காரணத்தாலும், மஹிந்த ராஜபக்ஷவுக்கே பிரதமர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் மேற்பார்வைப் பொறுப்பு ஜனாதிபதியின் வசமுள்ள நிலையில், ஏப்ரல் 22ல் நாடாளுமன்றம் முதன்முறையாக மீண்டும் கூடும்போது, மஹிந்த ராஜபக்ஷ, நாடாளுமன்றத்தில் தனது ஆதரவை உறுதி செய்ய வேண்டியது அவசியம். நாடாளுமன்றத்தின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில், மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்து பிரதமராகக் கடமையாற்ற ஜனாதிபதியால் உத்தியோக பூர்வமாக பணிக்கப்படுவார்.

71 வயதான லக்ஸ்மன் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பெரும்பான்மையில்லாத அரசினால் சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பு!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத அரசினால் சமாதான முயற்சிகள் மட்டுமன்றி எந்தவொரு செயற்பாட்டையுமே மேற்கொள்ளமுடியாது. இது சமாதான முயற்சிக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலாகுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நடந்து முடிந்த தேர்தலில் - மக்கள் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மைப் பலத்தை வழங்கவில்லை. இதனால் எந்தவொரு கட்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# சுயாட்சித் தமிழ் அரசா? சுதந்திரத் தமிழ் ஈழமா? சிங்கள தேசம் முடிவு செய்யட்டும்...!



நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேச மக்களிடம் ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பாகக் கருதி மேற்படி விடயத்துக்கு ஆணையிடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் கோரியிருந்தது.

அதன் அடிப்படையில் தமிழ்த் தேச மக்கள் 633, 654 வாக்குகளை வழங்கி 22 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெயது மிகப்பெரிய வெற்றியை வழங்கியமைக்காகவும், யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 257, 320 வாக்குகளை வழங்கியமைக்காகவும், எனக்கு (இல 3) 42, 191 விருப்பு வாக்குகளை வழங்கியமைக்காகவும், வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னைப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்வதற்கு பூரண ஆதரவை வழங்கிய அனைவருக்கும் விசேடமாக வடமராட்சிப் பகுதி மக்களுக்கும் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

தமிழ்த் தேசிய இனத்தின் அபிலாசைகளான மரபுவழித் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றிற்காக உழைப்பேன் என்றும், யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டு, எனது பணியைத் தொடருவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள சகல கிராமங்களுக்கும் கூடிய விரைவில் நேரில் வந்து நன்றி தெரிவிப்பேன் என்பதையும், மக்களுடைய பணியில் முழுமையாகத் தொடர்ந்து ஈடுபடுவேன் எனவும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

☆ கைத் தொலைபேசி இல:- 0777 - 729020
657, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 021 - 2226097

☆ 56, பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை.
தொலைபேசி இல:- 021 - 2263274

☆ 44C, சமிட் பிளாட்ஸ்,
கெப்பிட்டிக்பொல வீதி,
கொழும்பு - 5
(44 C SUMMIT FLATS,
KEPPITIPOLA ROAD,
COLOMBO - 5.)
தொலைபேசி இல:- 011 - 2559644

மக்கள் பணியில்,
எம்.கே.சிவாஜிலிங்கம்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.

(சி-2409)

## கிறிஸ்துவின் திருப்பாடுகள் நினைவாக

# யாகப்பர் இருதயசபை நடாத்திய பாசான் பாடல் போட்டி முடிவுகள்!

இயேசுக்கிறிஸ்துவின் திருப்பாடுகளின் நினைவாக பரிசுத்த வாரத்தில் குருநகர் புனித யாகப்பர் ஆலய இருதய சபையினர் நடாத்திய பாசான பாடல் போட்டியில் கீழ்க் காண்போர் தெரிவாகினர்.

**கீழ்ப்பிரிவு**

முதலாம் இடம் - அல்போன்ஸ் தனுசன், இரண்டாம் இடம் - யேசுதாசன் ஸ்ரெபி.

**மத்திய பிரிவு**

முதலாம் இடம் - அன்ரன் மேரி பிறின்சியா, இரண்டாம் இடம் - குமாரகுலசிங்கம் ஜசிந்தா, மூன்றாம் இடம் - அல்போன்ஸ் யூகலிஸ்ரா.

**சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம் - இ.ராஜ்றெனூசியஸ், இரண்டாம் இடம் - இராசநாயகம் துஷாந்தினி, மூன்றாம் இடம்- பிலிப் ஜெஹ்றான்.

**பொதுப் பிரிவு**

முதலாம் இடம் - மெடோனா மரியதாஸ், இரண்டாம் இடம் - யேசுராசா கிளவ்டியா.

மேற்படி நிகழ்வில், பங்குத் தந்தை அருட்திரு ஆர்.எக்ஸ். சகாயநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பாசான் போட்டியில் நடுவராக அருட்தந்தை அ.பி. ஜெயசேகரம் அடிகள் கடமையாற்றினார்.

(206)

நிறஞ்சனாஸ் சங்கானை
சரத் குமார், விக்ரம், தேவயானி
நடித்த
விண்ணுக்கும் மண்ணுக்கும்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)
THE ITTALION JOB
(சி-2262)

நாகம்ஸ் சுன்னாகம்


இலங்கையிலும்
இந்தியாவிலும
ஒரேதின
வெளியீடாக
விஜய், சிம்ரன்,
விவேக் தலைவாசல்
விஜய் மற்றும் பலர் நடித்த
A.R. ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 2.00, 7.00, 10.00 (பு.நே)
(சி-2397)

ராஜா யாழ்ப்பாணம்.
வசீகரன், பூஜா நடித்த

கண்களால் கைது செய்
காட்சி நேரம்:-
10.30, 2.30,
6.30, 9.30 (பு.நே)
(சி-2263)

ஞானோதய அக்கடமி
சங்கத்தானை
சாவகச்சேரி
※ A/L 2006 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பம்.
※ II வது பிரிவுகள் 07.04.2004 புதன் ந.ப. 12.00 மணி ஆரம்பம்.
※ தமிழ் : திரு.இரா.அகிலன்

# விடுதலை உணர்வுகளை சுமந்து வாழும் எமது உறவுகளுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்



**தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் அரசியல் பலத்தினை மீண்டும் ஒரு முறை உலகிற்கு நிருபித்துக்காட்டிய எமது நேசத்துக்குரிய மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக எனது உள்ளம் நிறைந்த நன்றிகள்.**

உங்கள் வாக்குகளை எனக்கு வழங்கி, அதிஉன்னத வெற்றிக்கு இட்டுச் சென்ற நீங்கள் அனைவரும் காட்டிய அந்த மகோன்னத ஆதரவுக்கு எனது நன்றி.

இந்த வெற்றி தனிப்பட்ட கஜேந்திரனுக்கு கிடைத்த வெற்றி அல்ல.

✌ தமிழீழ விடுதலைப் போராட்டம் , தமிழ்மக்களின் அரசியல் விடுதலைக்கான போராட்டம் என்ற எமது நிலைப்பாட்டிற்கு -

✌ தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் இனத்தின் ஏகபிரதிநிதிகள் என்ற எமது நிலைப்பாட்டிற்கு. தமிழ் இனத்தின் தன்னிகர் இல்லாத தலைவர் மேதகு வே.பிரபாகரன் என்ற எமது நிலைப் பாட்டிற்கு.

✌ இனப்பிரச்சினைக்கான தீர்வாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் எற்று அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டிற்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

இந்த மாபெரும் வெற்றிக்கு தோள் கொடுத்த யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர், யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி சமூகத்தினர், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்கள், யாழ்.மாவட்ட மாணவர்கள், யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தினர், ஆசிரியர் சமூகத்தவர்கள், பல்வேறு திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள், பல்வேறு கிராமிய அமைப்புக்கள், இளைஞர், யுவதிகள், விளம்பர மூலம் அனுசரணை வழங்கிய புலம்பெயர்ந்த மக்கள், மாணவர்கள் மற்றும் யாழ்.தேர்தல் மாவட்ட வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

**எமது மக்களின் விடுதலைக்காக இறுதிவரை உறுதியோடு உழைப்பேன் என உறுதியளிக்கிறேன்.**

(சி-2410)

- செல்வராஜா கஜேந்திரன் -

யாழ்ப்பாணம்



# நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானோரும் பெற்றுக்கொண்ட விருப்பு வாக்குகளும்!

### நுவரெலியா மாவட்டம்

ஐ.தே.க -
ஆறுமுகன் தொண்டமான் - 99783
முத்து சிவலிங்கம் - 85708
கே.ஜெகதீஸ்வரன் - 81386
எஸ்.பி.திஸநாயக்க - 71723

ஐ.ம.சு.மு -
சி.பி.ரத்நாயக்க - 55284
நிமல் ஜெயதிலக - 44229

ம.ம.மு -
பி.சந்திரசேகரன் - 42582

### இரத்தினபுரி மாவட்டம்

ஐ.ம.சு.மு -
பவித்திரா வன்னியாராச்சி - 125592
அசல ஜாகொட - 97083
ஜோன் செனவிரட்ன - 84284
தீபல் குணசேகர - 76883
பிறேமலால் ஜெயசேகரா - 71982
ரணவீர ஆராச்சிகே ஜெயவீர - 40382

ஐ.தே.க -
தலதா அத்துகோரள - 113917
சுசந்த புஞ்சிநிலமே - 96591
துனேஷ் கல்கந்த - 42738
மகிந்த ரட்ணதிலக - 36289

### கொழும்பு மாவட்டம்

ஐ.தே.க -
ரணில் விக்கிரமசிங்க - 329524
மிலிந்த மொரகொட - 99146
ரவி கருணாநாயக்க - 69975
எம்.எச்.முகமட் - 62559
தி.மகேஸ்வரன் - 57978
பந்துல குணவர்த்தன - 57460
முகமட் ம:.ரூப் - 55919
காமினி லொக்குகே - 53810
மனோகணேசன் - 51508

ஐ.ம.சு.மு -
விமல் வீரவன்ச - 237 185
சுனில் ஹந்து நெத்தி - 152 942
லக்ஷ்மன் நிருபனாராச்சி - 122 645
சுசில் பிரேமஜயந்த - 100 074
தினேஷ் குணவர்த்தன - 82 626
அர்ஜுன ரணதுங்க - 81 914
ஜீவன் குமாரதுங்க - 51 583
ஏ.எச்.எம்.பௌசி - 49 719

ஹெல உறுமய -
வண.உடுவே தம்மலோகதேரோ - 42850
கொட்ட பொல அமரகிட்டி தேரோ - 26539
கட்டலுவே ரதன் சிய தேரோ - 10512

### குருநாகல் மாவட்டம்

ஐ.ம.சு.மு -
அநுரா திஸநாயக்க - 153868
விமல் ரத்னநாயக்க - 116736
நிமல் கருணாரத்ன - 114516
அநுர பிரிய தர்சன யாப்பா - 65724
பி.பி.எக்கநாயக்க - 57079
எஸ்.பி.நாவின்ன - 53879
ஜெயரத்ன ஹேரத் - 53876
பாலித திஸநாயக்க - 52520
பந்துல பஸ்நாயக்க - 52099

ஐ.தே.க -
காமினி ஜெயவிக்கிரம பெரேரா - 119179
ஜோன்ஸ்ரன் பெர்ணாண்டோ - 112 601
அகிலா காரியவசம் - 83 114
இந்திக பண்டாரநாயக்க - 65 275
தயாசிறி ஜெயசேகர - 52 576
அமரா பியசீலி ரத்னாயக்க - 46 725
றோகித போகொல்லாகம - 44 216

### மாத்தளை மாவட்டம்

ஐ.ம.சு.மு -
மங்கள சமரவீர - 118 745
ஜினதாச ஹிந்துனேகொட - 109 417
பிறேமசிறி மானகே - 101 558
மகிந்தயாப்பா அபேவர்த்தன - 60 453
சந்திரசிறி கஜதீர - 46 129

ஐ.தே.க -
மகிந்த விஜேசேகர - 72 563
லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன - 66498
சாகல ரத்னாயக்க - 59 888

### களுத்துறை மாவட்டம்

ஐ.ம.சு.மு -
நந்தன குணதிலக - 135 743
ஜெயந்த சமரவீர - 95 461
றெஜினோல்ட் கூரே - 78 693
பியசிறி விஜேநாயக்க - 75 982
குமார வெல்கம - 73 350
ஹோகித அபே குணவர்த்தன - 62598

ஐ.தே.க -
ராஜித சேனாரத்ன - 97 001
மகிந்த சமரசிங்க - 93 758
சரத் ரணவக்க - 48 380

ஜாதிக ஹெல உறுமய -
வண அத்துரலியே ரத்ன ஹிமி - 10772

### கம்பஹா மாவட்டம்

ஐ.ம.சு.மு -
விஜித ஹேரத் - 215 540
அனுரா பண்டாரநாயக்க - 198 444
சிறிபால அமரசிங்க - 128 633
அஞ்ஞான் உம்மா - 111 755
ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே - 90307
லசந்த அழகிய வன்ன - 86 550
சிறிபதி சூரியாராச்சி - 76 637
பீலிக்ஸ் பெரேரா - 72 616
பந்து பண்டாரநாயக்க - 56 715

ஐ.தே.க -
கருஜெயசூரிய - 202 029
ஜோசப் மைக்கல் பெரேரா - 95 231
ஜெயலத் ஜெயவர்த்தன - 93 643
ஜோன் அமரதுங்க - 86 141
சரத் சந்திர ராஜகருண - 55 337
எட்வேட் குணசேகர - 44 890

ஹெல உறுமய -
வண.கொலன்னாவ
சிறி சுமங்கள ஹிமிர வண.
அபரெக்கே பன்னானந்த ஹிமி

### அனுராதபுர மாவட்டம்

ஐ.ம.சு.மு -
கே.டி.லால்கந்த - 114 319
ரணவீர பத்தநாக - 103 086
துமிந்த திஸநாயக்க - 72 710
எஸ்.எம்.சந்திரசேன - 56 651
திஸ்ஸ கரலியத்த - 40 935

ஐ.தே.க. -
பி. ஹரிசன் - 60 777
சந்தராணி பண்டார - 49 471
டபிள்யூ.பி.எக்கநாயக்க - 38 183

### அம்பாந்தோட்டை

ஐ.ம.சு.மு. -
மகிந்த ராஜபக்ஷ - 107 603
நிகால் கலபதி - 96 039
விஜித ரணவீர - 86 184
மகிந்த சமரவீர - 63 118
சமல் ராஜபக்ஷ - 56 416

ஐ.தே.க -
சஜித் பிறேமதாஸ - 82 968
பிலிப் வீடாராச்சி - 40 739

### பொலநறுவை மாவட்டம்

ஐ.ம.சு.மு. -
மைத்திரிபால சிறிசேன - 72 451
என்.கே.சுபசிங்க - 61 580
சிறிபால கம்லத் - 47 088

ஐ.தே.க. -
ஏர்ல் குணசேகர - 38 681
சந்திர சிறி சூரியாராச்சி - 37 983

### பதுளை மாவட்டம்

ஐ.தே.க. -
டபிள்யூ.கே.எம்.லொக்குபண்டார -56 954
ரவீந்திர சமரவீர - 49 387
எம்.சச்சிதானந்தன் - 44 934
லக்ஷ்மன் செனவிரத்ன - 40 820
வடிவேலு சுரேஸ் - 37 520
சமந்த வைத்யரத்ன - 98 880
நிமால் சிறிபால டி சில்வா - 69 799
டிலான் பெரேரா - 64 655

### கேகாலை மாவட்டம்

ஐ.ம.சு.மு. -
காமினி ரத்னாயக்க - 90 070
அனுருத்த பொல் கம்பொல - 84 981
றஞ்சித் சிபம்பலபிட்டிய - 80 485
மகிபால ஹேரத் - 71 682
அதாவுட செனிவிரத்ன - 53 891

ஐ.தே.க. -
கபீர் காசிம் - 69 371
நிஸங்க விஜேரத்ன - 44 271
ருக்மன் சேனநாயக்க - 43 630

### காலி மாவட்டம்

ஐ.ம.சு.மு. -
அஜித் குமார - 128 000
சந்திரசேனா விஜேசிங்க - 101 378
திலகரத்ன விதானாச்சி - 85 627
பியசேன கமகே - 71 504
அமரசிறி தொடங்கொட - 60 282
குணரத்ன வீரக்கோன் - 58 154

ஐ.தே.க. -
விஜிர அபேவர்த்தன - 124 892
ஹேமகுமார நாணயக்கார - 82 853
கயந்த கருணாதிலக - 63 222
லயனல் பிறேமசிறி - 40 069

### மாத்தளை மாவட்டம்

ஐ.ம.சு.மு. -
சுஜாதா அமரக்கோன் - 57 234
ஜனக தென்னக்கோன் - 54 711
றோகண திஸ்நாயக்க - 37 091

ஐ.தே.க. -
ரஞ்சித் அலுவிகார - 47 142
அலிக் அலுவிகார - 39 649.

## அன்னைபூபதி நினைவாலயத்தில் புதைக்கப்பட்ட ராஜன்சத்தியமூர்த்தியின் சடலம் அகற்றப்பட்டது

(மட்டக்களப்பு)

அண்மையில் மட்டக்களப்பில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களின் சூட்டிற்கு இலக்காகிக் கொல்லப்பட்ட இராஜன் சத்தியமூர்த்தியின் சடலம் - அன்னைபூபதியின் நினைவாலயத்திற்கு அருகே புதைக்கப்பட்டது.

ஒரு வாரத்திற்கு முன்னர் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பலியான மட்டக்களப்புத் தமிழ்த் தேசிய முன்னணி வேட்பாளரான இராஜன் சத்தியமூர்த்தி மற்றும் அவரது மைத்துனரின் சடலங்கள், மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள அன்னை பூபதியின் நினைவாலயத்தில் புதைக்கப்பட்டன.

இவை அன்னை பூபதிக்கருகே புதைக்கப்படுவது குறித்து அப்போதே அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தபோதும், கருணா குழுவால் பலாத்காரமுறையில் இருவரது சடலங்களும் அன்னை பூபதியின் நினைவாலயத்திற்கு அருகே அடக்கம் செய்யப்பட்டன.

இந்த நிலையில் இருவரது சடலங்களும் நேற்றுக்காலை தோண்டியெடுக்கப்பட்டு, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிறிதொரு இடத்தில் எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கருணாவின் நெருங்கிய சகாக்கள்கூட அவரது நடவடிக்கைகளில் அதிருப்தியுற்றிருப்பதாகவும், இதனால் கருணா மிகுந்த நெருக்கடிக்குள்ளாகியிருப்பதாகவும் தெரியவருகிறது.

குறிப்பாக கருணாவுடன் இருக்கும் ஒரு சில தளபதிகளும், தங்களை கருணாவிடம் இருந்து விடுவித்து விடுதலைப் புலிகளுடனான உறவை மீண்டும் ஏற்படுத்துவதிலேயே முனைப்புக் கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எந்தவொரு நிலையிலும் இலங்கை அரச படைகளோ அல்லது கூலிக் குழுக்களோ கருணாவை ஒரு சதவீதம் தானும் நம்பத் தயாராக இல்லையென்றும், அதேபோன்று கருணாவும் இவர்களை நம்பித் தன்னை பலி கொடுக்கும் திட்டங்களிற்கு அகப்படப் போவதில்லையென்பதுமே தற்போதைய நிலையாகவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## அரசியல்நிலைமை குறித்து உன்னிப்பாக அவதானிப்பு!

### இரா. சம்பந்தன் தெரிவிப்பு

தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம்.

இவ்வாறு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகத் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இரா.சம்பந்தன் நேற்று முன்தினம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடினார்.

அத்துடன், விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற முன்மொழிவின் பின்னால் நாம் உறுதியாக நிற்கின்றோம். தமிழ் மக்கள் நடந்து முடிந்த தேர்தல்மூலம் தாம் அனைவரும் இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை என்ற முன்மொழிவின் பின்னால் உறுதியாக நிற்கின்றார்கள் என்பதனை வெளிப்படுத்தியுள்ளனர்.

பலநூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் போரின் காரணமாக இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் கடும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே, விரைவில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிப் போரால் பாதிப்படைந்த தமது இருப்பிடங்களைப் புனரமைத்து, மீளக் குடியமர விடுதலைப் புலிகளின் இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவு வழிவகுக்கும் எனவும் தெரிவித்தார்.

## சுதந்திரமான முறையிலேயே வாக்களிப்பு இடம்பெற்றது!

### ஜோன் குஸ்னகன் தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தல் - வன்முறைகள் இன்றி சுதந்திரமாகவும், நீதியாகவும் இடம்பெற்றதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்தனர்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற பொதுத்தேர்தல் குறித்து கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் - தேர்தல் ஆணையாளரிடம் சமர்பித்த அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நடைபெற்று முடிந்த தேர்தலில் எதிர்பார்த்தவிதமாக எந்தவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை. சில இடங்களில் சிறு குழப்பங்கள் ஏற்பட்டபோதிலும், தேர்தல் சுதந்திரமாகவும், நீதியாகவும் இடம்பெற்றது.

அரச ஊடகங்கள் ஜனாதிபதிக்குச் சார்பாக பிரசாரங்கள் செய்துள்ளன. எனினும், பிரதமருக்குச் சார்பாகத் தனியார் ஊடகங்கள் பிரசாரத்தில் ஈடுபட்டன என்றும் தெரிவித்தார். (01)

## ஹெல உறுமய கட்சிக்குள் பிளவு ஏற்படுகின்ற நிலை!

(கொழும்பு)

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின் ஜாதிக ஹெல உறுமய கட்சிக்குள் பிளவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, ஜாதிக ஹெல உறுமயவிலுள்ள சில பௌத்த பிக்குகள் எடுத்துள்ள முரண்பாடான நிலைப்பாடுகளால், அந்தக் கட்சியிலுள்ள சிலர் பிரிந்துசென்று தனியாக இயங்க முடிவெடுத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்த நெருக்கடிநிலை தோன்றுவதற்குக் காரணம் வண.எல்லாவெல மெத்தானந்த தேரர் மற்றும் வண. ஒமல்பே சோபிததேரர் இருவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு தமது கட்சி பூரண ஆதரவு வழங்கும் எனத் தெரிவித்திருந்தனர். ஆனால், அந்தக் கட்சியிலுள்ள வண.உடுவே தம்பலோக தேரோ, வண.கொலன்னாவை சுமங்கள தேரோ மற்றும் வண அத்துரலியரத்ன தேரோ மூவரும் ஐக்கிய தேசியக் கட்சி அரசமைப்பதற்கான ஆதரவினைத் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த இருகட்சி ஆதரவு நிலைப்பாடு ஜாதிக ஹெல உறுமயவில் தொடருமாக இருந்தால், அந்தக் கட்சியிலிருந்து தேர்தல்மூலம் நாடாளுமன்றம் தெரிவான பெருமளவான பௌத்த பிக்குகள் கட்சியிலிருந்து விலகி நாடாளுமன்றில் தனித்து இயங்க முடிவெடுக்கலாம் எனவும் அந்தக் கட்சியின் உள்ளக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, வண.உடுவே தம்மலோக தேரர், அத்துரலிய ரத்ன தேரர் இருவரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நடவடிக்கைகளுக்குப் பல மில்லியன்களை செலவு செய்த ஐ.தே.கட்சிக்கு நன்றி தெரிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

# 400 விக்கெட்டை நெருங்கும் இந்திய வீரர் அனில் கும்ப்ளே!



இந்திய அணியின் முன்னணி சுழற் பந்துவீச்சாளர்களில் ஒருவரான கும்ளே 82 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 390 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இவர் 400 விக்கெட்டுக்களைக் கைப்பற்ற இன்னும் 10 விக்கெட்டுக்கள் தேவை.

இந்திய வீரர்களில் கபில்தேவ் மட்டுமே 400 விக்கெட்டுக்களுக்கு மேல் எடுத்துள்ளார். இந்த விக்கெட்டை எடுக்கும் இரண்டாவது வீரர் கும்ளே ஆவர். அவர் 24 முறை 5 விக்கெட்டுக்கு மேலும் 5 முறை 10 விக்கெட்டுக்கு மேலும் எடுத்துள்ளார். 74 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது அவரது சிறப்பான பந்துவீச்சாகும்.

கும்ளே பாகிஸ்தான் தொடரிலேயே 400 விக்கெட்டைக் கைப்பற்ற வாய்ப்பிருக்கிறது.

டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதல் 10 வீரர்கள் வருமாறு.

1வோல்ஷ் (மே.தீவுகள்)132 டெஸ்டில் 519 விக்கெட்.
2.வோர்ன் (அவுஸ்ரேலியா)110 டெஸ்டில் 517 விக்கெட்
3.முரளீதரன் (இலங்கை)88 டெஸ்டில் 513 விக்கெட்
4.கபில்தேவ் (இந்தியா)131 டெஸ்டில் 434 விக்கெட்
5.ஹேட்லி (நியூசிலாந்து)86டெஸ்டில் 431விக்கெட்
6.மெக்ராத் (அவுஸ்ரேலியா) 95 டெஸ்டில் 430 விக்கெட்
7.வாசிம் அக்ரம் (பாகிஸ்தான்) 104 டெஸ்டில் 414 விக்கெட்
8.அம்புரோஸ் (மே.இ.தீவுகள்) 98 டெஸ்டில் 405 விக்கெட்
9.கும்ளே (இந்தியா) 82 டெஸ்டில் 390 விக்கெட்
10.போத்தம் (இங்கிலாந்து) 102 டெஸ்டில் 383 விக்கெட்

## 36 வருடங்களின் பின்னர்

# மேற்கிந்தியத் தீவுகள் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது!

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றியது.

மேற்கிந்தியத் தீவுகள் இங்கிலாந்து அணிகள் இடையேயான 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிட்ஜ்டவுனில் நடந்தது. மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்சில் 224 ரன்களும் இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 226 ரன்களும் எடுத்தன.

பின்னர் 2 அவது இனிங்ஸை ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி இரண்டாவது நாள் ஆட்ட நேரமுடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 21 ரன்கள் எடுத்திருந்தது.

3 ஆவது நாள் தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியின் விக்கெட்டுக்கள் வேகமாக சரிந்தன. அந்த அணி 94 ரன்களில் சுருண்டது. லாரா அதிகபட்சமாக 33 ரன்கள் எடுத்தார்.

ஹோகாட் தொடந்து 3 பந்துக்களில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார். சார்வான், சந்திர போல், ஹிண்ட்ஸ ஆகியோரது விக்கெட்டை தொடர்ந்து கைப்பற்றினார்.

பின்னர் 93 ரன்கள் எடுத்தால் வெற்றி எனற இலக்குடன் 2 ஆவது இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 93 ரன்கள் எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. திரெஸ் கோதிக் 42 ரன்னும். வோகன் 32 ரன்னும் எடுத்தனர்.

இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது. ஏற்கனவே நடந்த முதல் இரண்டு டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து வெற்றி பெற்றுள்ளது.

36 ஆண்டுகளுக்கு பிறகு மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் இப்போது தான் இங்கிலாந்து அணி தொடரை வென்று சாதனை படைத்துள்ளது.

# டெஸ்ட் போட்டியில் பங்கேற்க பாகிஸ்தான் செல்கிறார் கங்கூலி!



பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தின்போது இந்திய அணியின் கப்டன் கங்கூலிக்குக் காயம் ஏற்பட்டது. 5 ஆவது ஒரு நாள் போட்டியின் களத்தடுப்பின் போது அவருக்கு முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டது.

இதன் காரணமாக முல்தானில் நடந்த முதல் டெஸ்டில் ஆடவில்லை. லேசான காயம் என்றாலும் கங்கூலி உடல் தகுதியுடன் இல்லை.

இதனால் கடந்த சில தினங்களுக்க முன்பு சிகிச்சைக்காக அவர் கொல்கொத்தா திரும்பினார். இதனால் நேற்று தொடங்கிய 2 ஆவது டெஸ்டிலும் அவர் ஆடவில்லை. முழு உடல் தகுதி பெற்றுவிட்டதால் ராவல்பிண்டியில் வரும் 13 ஆம் திகதி தொடங்கும் கடைசி டெஸ்டில் கங்கூலி ஆடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இன்று பாகிஸ்தான் செல்லவிருக்கிறார்.

## லாகூர் இரண்டாவது டெஸ்ட்டில்

# சகல விக்கெட்டுக்களையும் இழந்து இந்திய அணி 287 ஓட்டங்கள்!

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று லாகூரில் தொடங்கிய இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.



முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ராவிட் தனது அணி முதலில் துடுப்பெடுத்தாடுமெனத் தெரிவித்தார்.

இதன்படி - முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி வீரர்கள் எவரையும் நிலைத்து நின்று ஆட பாகிஸ்தான் பந்துவீச்சாளர் உமர் குல் விடவில்லை. அவரது பந்துவீச்சில் இந்திய அணியின் முக்கிய ஐந்து துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி சார்பில் ஷேவாக் 39, ராவிட் 33, யுவராஜ்சிங் 112 (டெஸ்ட் போட்டியில் இது அவரது முதல் சதம்) இர்பான் பதான் 49 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களையும், ஆகாஷ் சோப்ரா 4, டெண்டுல்கர் 2, அகர்கர் 2, பட்டேல் மற்றும் பாலாஜி இருவரும் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் 19 வயதுடைய உமர் குல், ஷேவாக், ராவிட், டெண்டுல்கர், லக்ஷ்மன் மற்றும் பட்டேல் ஆகிய ஐந்து இந்திய அணி விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். அத்துடன், மொகமட் சமி மற்றும் டேனிஸ் கனேரியா ஆகிய இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், அக்தர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில், தபீக்உமர் 24 ஓட்டங்களுடன் பாலாஜியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். தற்போது இம்ரான் பர்கத் 25, யாசீர் ஹமிட் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.



நேற்றைய போட்டியில், பாகிஸ்தான் அணியில் விக்கெட் காப்பாளர் மொயின் கான் வேகப்பந்து வீச்சாளர் சபீர் அகமட் மற்றும் சகலதுறை வீரர் அப்துல் ரஸாக் ஆகியோர் காயம் காரணமாக விளையாடவில்லை. அத்துடன், சுழல் பந்துவீச்சாளர் சக்லைன் முஸ்தக் இந்தப் போட்டியில் இடைநிறுத்தப் பட்டுள்ளார். இவர்களுக்குப் பதிலாக விக்கெட் காப்பாளராக ஹம்ரான் அக்மல், அஸிம்கமல், டேனிஸ் கனேரியா, உமர் குல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியில் காயமடைந்துள்ள சகீர் கானுக்குப் பதிலாக அகர்கர் இணைக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு

# இலங்கை கிரிக்கெட் அணி சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம்!

இலங்கை கிரிக்கெட் அணி வரும் 20 ஆம திகதி முதல் மே மாதம் 18 ஆம் திகதி வரை சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது.

ஒருநாள் போட்டிகள் வரும் 20, 22, 25, 27 மற்றும் 29 ஆம் திகதிகளில் நடைபெறும். முதல் டெஸ்ட் மே 6 -10 ஆம் திகதி வரை ஹராரேயிலும், 2 ஆவது டெஸ்ட் 14 - 18 ஆம திகதி வரை புலவாயோவிலும் நடைபெறும்.

தனது சொந்த மண்ணிலேயே இலங்கை அணி அவுஸ்ரேலியாவிடம் டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரை இழந்ததால் நெருக்கடியில் உள்ளது.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து டெஸ்ட் கப்டன் பதவிலிருந்து திலகரத்ன விலகினார். அத்தப்பத்து தற்போது டெஸ்ட் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடரில் முரளிதரன் டெஸ்டில் அதிக விக்கெட்டைக் கைப்பற்றிய வோல்ஷின் சாதனையை முறியடிக்க வாய்ப்பு உள்ளது. சாதனையை முறியடிக்க முரளிதரனுக்கு 7 விக்கெட்டுக்கள்தான் தேவை என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடக மாநிலத்தில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சி!

அர்க் மார்க் அமைப்பும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றும் இணைந்து கர்நாடக மாநில சட்டசபை தேர்தல் குறித்து கருத்து கணிப்பு நடத்தின.

மார்ச் மாதம் 2 அம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை 10,454 வாக்காளர்களிடம் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இங்கு 41 சதவித வீத வாக்காளர்கள் மீண்டும் எஸ்.எம்.கிருஷ்ணா ஆட்சிக்கு வருவதையே விரும்புகின்றனர். கடந்த 1999 ஆம் ஆண்டில் நடந்த சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 132 இடங்கள் கிடைத்தன. ஆனால் இப்போது நடந்த கருத்துக் கணிப்பில் 3 முதல் 13 இடங்கள் குறைவாகவே கிடைக்கும் என்று தெரியவந்துள்ளது. அதாவது 113 இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெறும்.

113 இடங்களே காங்கிரஸ் கட்சிக்கு கிடைக்கும் என்பதால் ஆட்சி அமைக்க சுயேச்சை எம்.எல்.ஏ.க்கள் மற்றும் சிறிய கட்சிகளின் ஆதரவு காங்கிரஸ் கட்சிக்குத் தேவைப்படும் நிலை ஏற்படும்.

கடந்த 99 ஆம் ஆண்டு பாரதீய ஜனதாவுக்கு 21 சதவீதமும், ஐக்கிய ஜனதா தளத்துக்கு 14 சதவீத வாக்குகளும் கிடைத்தன. தற்போது இந்தக் கட்சிகளுக்கு வாக்காளர்களின் ஆதரவு அதிகரித்துள்ளது.

பழைய மைசூர் மற்றும் மாநிலத்தின் வட பகுதிகளில் பாரதீய ஜனதாவின் பலம் அதிக அளவு வளர்ந்துள்ளது. இதனால் எதிர்க்கட்சி அந்தஸ்தை பாரதீய ஜனதா கட்சி தக்க வைத்துக் கொள்ளும். பாரதீய ஜனதா - ஐக்கிய ஜனதாதளம் கூட்டணிக்கு 70 முதல் 80 இடங்கள் வரை கிடைக்கும்.

கடந்த 99 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் மதச்சார்பற்ற ஜனதா தளத்திற்கு 10 சத வீத வாக்குகள் கிடைத்தன. அது தற்போது 14 சதவீதமாக உள்ளது. ஊரக பகுதிகளில் மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு தொடர்ந்து ஆதரவு அதிகரித்துள்ளது என கருத்துக் கணிபபிலிருந்து தெரியவருகிறது.

# ராமதாஸை கைது செய்ய ஜெயலலிதா திட்டம்!

## விளைவுகள் குறித்து ஆராயப்படுகிறது

ரஜினி ரசிகர்கள் - பா.ம.க வினர் இடையே மோதல் தொடர்பாக ராமதாஸ் மீது கொலை முயற்சி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதால் அவர் எந்த நேரமும் கைதாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

ராமதாஸைக் கைதுசெய்ய வேண்டும் என்ற கோஷத்துடன் நேற்றுமுன்தினம் ரஜினி ரசிகர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில் ராமதாஸைக் கைது செய்வதற்கான முன்னேற்பாடுகளில் பொலிஸார் இறங்கியுள்ளனர்.

தேர்தல் நேரத்தில் அவர் கைது செய்யப்பட்டால் அது எந்த மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்து உளவுப் பிரிவுப் பொலிஸார் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணிகது இலாபம் ஏற்படும் என உளவுப் பிரிவு தெரிவித்ததால் ராமதாஸ் கைதாவது உறுதி என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை - வை.கோ விடயத்தில் ஆனது போல ராமதாஸின் கைது அரசுக்கு எதிரான அலையை ஏற்படுத்திவிடும் என்றால் கைது நடவடிக்கை தேர்தலுக்குப் பின்னர் வைத்துக்கொள்ளப்படும் என்கின்றனர் உயர் அதிகாரிகள்.

இந்நிலையில் தான் எந்நேரமும் கைது செய்யப்படலாம் என்று கருதும் ராமதாஸ் அதைச் சந்திக்கவும் தயாராகிவருகிறார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

# தீவக அரசியற்துறைப் பொறுப்பாளரை ஈ.பி.டி.பி. ஆயுதமுனையில் அச்சுறுத்தல்

## கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு

விடுதலைப் புலிகளின் தீவகக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.அருந்தவம் மற்றும் சக அரசியற்துறைப் போராளிகள் சிலர் ஈ.பி.டி.பியினரால் ஆயுதமுனையில் அச்சுறுத்தப்பட்டதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை காலை ஊர்காவற்துறைப்பகுதியின் நாரந்தனைச் சந்தியூடாகப் பயணித்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் தீவக அரசியற்துறைப் போராளிகளைப் பொலிஸ் பாதுகாப்புடன் வந்திருந்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் கைத்துப்பாக்கிகளைக் காட்டி அச்சுறுத்தியுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நாரந்தனை சந்திப் பகுதியில் - அந்தப் பகுதி மக்கள் ஆர்ப்பாட்டப் போராட்டமொன்றை நடாத்தினர்.

நூற்றுக்கணக்கில் திரண்டிருந்த பொதுமக்கள் - ஈ.பி.டி.பி. அமைப்புக்கு எதிராக கோஷங்களை எழுப்பியதுடன், பொலிஸ் பாதுகாப்பின் கீழ் விடுதலைப் புலிகளது அரசியற்துறைப் போராளிகள் மீது ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர்களால் அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல் சம்பவங்களையும் கண்டித்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் ஒரு மணிநேரத்திற்கு மேலாக அந்தப்பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் குதித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினை அவரது ஆதரவாளர்கள் அவரது அலுவலகத்தில் வைத்து மலர்மாலை அணிவித்து, வரவேற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# புங்குடுதீவு ஈ.பி.டி.பி. முகாம் மக்களால் தீ வைத்து எரிப்பு

புங்குடுதீவின் பெருங்காட்டு சந்திப்பகுதியில் அமைந்திருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகமொன்று அப்பகுதி மக்களால் கடந்த சனிக்கிழமை தீயிட்டுக் கொழுத்தப்பட்டது.


இராணுவ, பொலிஸ் பாதுகாப்புடன் நீண்டகாலமாக அப்பகுதியில் குறித்த அலுவலக முகாம் அமைந்திருந்ததாகத் தெரியவருகின்றது.


இதேவேளை, இந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் அலுவலகத்தை தீயிட்டு எரிப்பதற்கு முன்னதாக அப்பகுதி மக்கள் கற்களை கொண்டு தாக்கியதாகவும், அதையடுத்து அங்கு முன்னதாக தங்கியிருந்த ஈ.பி.டி.பி. அமைப்பின் உறுப்பினர்கள் சிலர் தப்பித்துச் சென்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - ஈ.பி.டி.பி அமைப்பின் அலுவலகத்தில் தங்கிநின்றிருந்த அவ்வமைப்பின் உறுப்பினர்கள் சிலருக்கும், பிரதேச மக்களுக்குமிடையே நீண்ட நாட்களாக முறுகல்நிலை நீடித்திருந்தது. இதையடுத்து, குறித்த அலுவலகத்திலுள்ள ஈ.பி.டி.பி அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்பாக, அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் - பொது மக்கள் புகார்செய்திருந்தனர்.

எனினும், இவ்விடயம் தொடர்பில் பொலிஸார் எந்தவொரு நடவடிக்கையினையும் இதுவரையும் எடுககவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் தேர்தல் நடவடிக்கைகளுக்கென அங்கிருந்த படையினரும், பொலிஸாரும் அங்கிருந்து விலக்கப்பட்டிருந்தநிலையிலேயே, இந்த அலுவலகம் தீயிடப்பட்டதாகத் தெரியவருகின்றது.





தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் ஒன்றுகூடியபோது எடுக்கப்பட்ட படம.

# அமெரிக்க இராணுவ மருத்துவக்குழு இம்மாத இறுதியில் யாழ். வரவுள்ளது

அமெரிக்க நாட்டு இராணுவ மருத்துவக் குழு ஒன்று இந்தமாதம் இறுதியில் யாழ்.மக்களுக்குச் சிகிச்சையளிக்கும் பொருட்டு வருகை தரவுள்ளது.

அமெரிக்க நாட்டு இராணுவ மருத்துவக் குழுவினர் - பல அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலும் இத்தகைய மருந்துவச் சேவைகளைச் செய்து வருகின்றனர்.

அந்தவகையிலே - எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்.மாவட்டதில் வாழும் மக்கள் நன்மையடையக் கூடிய வகையில் பல்வேறுபட்ட பாரிய நோய்களுக்கும், மாற்றமுடியாத நோய்களுக்கும் யாழ்.போதனா வைத்திய சாலையினூடாக இலவச வைத்திய சேவை வழங்கவுள்ளனர்.

பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை பெற விரும்புவோர்ருக்கு கண், காது, மூக்கு மற்றும் முடி உதிர்தல் முதலான நோய்களுக்கும் இந்த வைத்தியக் குழுவினரால் சிகிச்சையளிக்கப்படவுள்ளது.

நீண்டகாலமாகக் குணப்படுத்த முடியாத நோய்களுக்கும் அவர்கள் சிகிச்சையளிக்கவுள்ளனர். இந்தச் சிகிச்சையைப் பெறவிரும்புவோர் - யாழ. போதனா வைத்தியசாலையால் அறிவித்தல் வெளியிடப்படும்போது, அதன்படி நோயாளர்கள் தொடர்பு கொண்டு சிகிச்சைகளைப் பெறமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவருடமும் இவ்வாறு வெளிநாட்டு சத்திரசிகிச்சை நிபுணர்கள் மற்றும் மருத்துவக் குழுக்கள் வந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதில் தாய்லாந்து, பிரிட்டிஸ் மருத்துவக்குழுக்களின் சேவையால் அதிகளவு குடாநாட்டு மக்கள் நன்மையடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ப)

# உயர்தரப்பாட பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

தீவக வலயக்கல்வி மேம்பாட்டு பேரவை நடத்தும் - க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு - ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரியில் இன்று தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்கள்வரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு கணக்கீடும், பொருளியலும் - நாளை காலை 9.30 மணிக்கு வணிகக்கல்வியும் - மறுநாள் 8 ஆம் திகதி இந்து நாகரிகம், தமிழ், அரசறிவியல் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : ச.காயத்திரி
முகவரி : பேர்ண், சுவிஸ்சலாந்து.


## இராணுவ சிப்பாய் தற்கொலை முயற்சி

வடமராட்சி வடக்கின் இன்பருட்டி கரையோரப் பகுதியிலுள்ள இராணுவ காவலரணொன்றில் கடமையாற்றிக்கொண்டிருந்த இராணுவ சிப்பாய் ஒருவர் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலைசெய்துகொளள முற்பட்டதாகக் கூறப்படுகிறது. நேற்றுமுனதினம் இன்பருட்டியின் சக்கோட்டைகரையோர கிராமத்திலுள்ள, காவலரண் ஒன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த குறித்த சிப்பாயொருவரே துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகியுள்ளார்.

அவர் கடமையில் ஈடுபட்டிருந்த காவலரண் பகுதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், இதையடுத்து அங்கு விரைந்த சக வீரர்களால் படுகாயமடைந்த நிலையில் குறித்த சிப்பாய் மீட்கப்பட்டதாகவும் கிராமமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, படுகாயமடைந்த இராணுவ சிப்பாய் - இராணுவ வாகன மூலம் அன்றிரவு, பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தார். எனினும், அவரது நிலைதொடர்பான தகவல்கள் ஏதும் பின்னர் வெளியாகியிருக்கவில்லை.

# வட இலங்கை சங்கீதசபை நடத்தும் வதிவிடக் கருத்தரங்கும், செயலமர்வும்

## இன்றுமுதல் ஆரம்பம்

வடஇலங்கை சங்கீதசபை நடத்தும் வதிவிடக் கருத்தரங்கும், செயலமர்வும் இன்றுமுதல் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 5 மாணவர்களுக்குப் பகல் நேரக்கருத்தரங்காகவும், தரம் 6 மாணவர்களுக்கு வதிவிடக்கருத்தரங்காகவும் நடைபெறவுள்ளது.

இன்றைய முதல் நாள் நிகழ்ச்சியாக காலை 5 மணிமுதல் ஆயத்தங்கள் இடம்பெற்று, 6.30 மணிமுதல் இறைவணக்கம் மற்றும் வரவு பதிதல் என்பன இடம்பெற்று, 7 மணிக்குத் துறைசார் பயிற்சிகள் இடம் பெறும்.

இந்தப் பயிற்சிகளை சங்கீத வித்துவான் சிவஸ்ரீ க.இராமநாதன், நடன ஆசிரிய ஆலோசகர் திருமதி ய.விவேகானந்தன், மிருதங்க வித்துவான் துரைராஜா மற்றும் நாடக ஆசிரியர் ச.கிருபானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

காலை 9 மணியளவில் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையுரை நிகழ்த்துவார்.

9.45 மணியளவில் கருத்தரங்கின் நோக்கமும், வடஇலங்கை சங்கித சபையின் வளர்ச்சியும் என்ற தலைப்பில் ஓய்வுபெற்ற உதவிக் கல்விப்பணிப்பாளா அ.தற்பரானந்தன் நிகழ்த்துவார். காலை 11 மணிக்கு பேராசிரியர் சபா. ஜெயராஜா தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு துறைசார் அரங்குகள் என்ற தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறும். இதில் சங்கீத ஆசிரியர்களான - வீ.சிவஞானசேகரம், கி.பத்மநாதனும், நடன ஆசிரியர்களான திருமதி குஞ்சிதபாதம், வி.விஜிதா, மிருதங்க வித்துவான் மா.சிதம்பரநாதன், நாடக ஆசிரியர் பா.கணேசதுரை ஆகியோர் கலந்துகொள்வர்.

மாலை 4 மணிமுதல் இசை அரங்கும் கலந்துரையாடலும் இடம்பெறும். சங்கீத ஆசிரியர் பொன்.ஸ்ரீ. வாமதேவர், நடனபாட ஆசிரிய ஆலோசகர் திருமதி ப.செல்வேந்திரகுமார், மிருதங்க ஆசிரியர் சி.துரைராஜா , நாடக ஆசிரியர் இ.ஜெயரஞ்சினி ஆகியோர் கலந்துரையாடலை நெறிப்படுத்துவர்.

மாலை 6.15 மணிமுதல் ஆசிரியர் தரத்துக்கு தோற்றுவோருக்கான கற்பித்தல் சாதனங்கள் தயாரிப்பு என்பன இடம்பெறும்.


வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்




# அற்புதமான வண்ணத்துப்பூச்சி

நீல நிற வண்ணத்துப்பூச்சிகள் 1979 ஆம் ஆண்டு பிரித்தானியாவிலிருந்து முழுமையாக அழிந்துவிட்டன. மீண்டும் அவ்வினம் பெருகத்தொடங்கியுள்ளன. சென்ற ஆணடில் 6000 வரை அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன. சுவீடனிலிருந்து நீலநிற வண்ணத்துப்பூச்சிகளை மீண்டும் பிரித்தானியாவில் அறிமுகம் செய்துள்ளனர்.



உலகில் நீல நிற வண்ணத்துப் பூச்சிகள் 6 இனங்கள் காணப் படுகின்றன. இவ்வினங்கள் எல்லாம் அழிந்துவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நவீன பயிர்ச்செய்கை முறைகள், வணணத்துப்பூச்சிகளின் வாழ்விடங்களை அழித்துவிட்டன. இவை குறுகிய உயரம்கொண்ட புற்கள் உள்ள இடங்களையே கூடுதலாக நாடிச்செல்கின்றன. மேலும் செயற்கை உரங்கள் பாவிக்கப்படும் இடங்களை கூடுதலாக நாடிச்செல்வதில்லை. சிவப்புநிற வண்ணத்துப்பூச்சிகள் கூட்டுப் புழுக்களில் காணப்படும் ஒருவகை இனிப்புப்பொருளினால் கவரப்பட்டு, அவற்றை தமது இருப்பிடங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. சிவப்பு எறும்புகளின் முட்டைகளை உண்பதன் மூலம் வணணத்துப்பூச்சிகள் தமது இனத் தைப் பெருக்கிக்கொள் கின்றன.

மேலும் உயர்ந்த புற்கள் உள்ள இடங்களில் சிவப்பு எறும்புகள் காணப்படுவதில்லை. இதனால் வண்ணத்துப் பூச்சிகளின் இனப்பெருக்கத்துக்கு உகந்த சூழ்நிலையும் அருகி வந்துள்ளது. நீலநிற வண்ணத்துப்பூச்சிகளின் இனம அழிந்து செல்வதற்கு முக்கிய கா்ரணமாக இதனைத் தெரிவித்துள்ளனர்.

# பசுமைப் புரட்சி

உலகம் முன்னர் காணப்பட்டதிலும் பசுமைமிக்கதாக மாறிவருவதாக ஐக்கிய நாடுகளின் சூழல்பாதுகாப்புத் திட்டம் அறிவித்துள்ளது. செயற்கைக்கோள்களின் மூலம் மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளன. கடந்த 25 ஆண்டுகள் மேற்கொண்ட ஆய்வுகள் தெரிவித்துள்ளன. தாவரங்களின் சுவாசச் செயற்பாடுகளிலும் பார்க்க அவற்றின் ஒளித்தொகுப்பு செயல்பாடுகளில் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நவீன முறைகளும், சூழல்பாதுகாப்புத் திட்டங்களும் சூழல் பசுமை மிக்கதாக மாறுவதற்குக் காணமாக அமைந்துள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர். உஷ்ணவலயப்பிரதேசங்களில் மரங்களின் வளர்ச்சி 80 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அறிந்துள்னர். அமேசன் காடுகளில் சூரிய ஒளி மரங்களை அடையமுடியாதவாறு அசுத்தமான முகில்களை முன்னர் மறைத்திருந்தன. சூழல் பாதுகாப்பிற்கு எடுத்த நடவடிக்கைகள் கூடுதலான சூரிய ஒளி மரங்களை நாடிச்செல்வதற்கு உதவியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். காபநீர்ஒக்சைட்டு வளிமண்டலத்தில் அதிக செறிவுடன காணப்பட்டதால் வளிமண்டலத்தில் அதிகரித்த வெப்பம் (**GREEN HOUSE EFFECT**) தாவரங்கள் மிருகங்கள் ஆகிவற்றிற்கு மனதனால் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் பசுமையான சூழலை உருவாக்க முடியாதிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மொங்கேலியா சீனா ஆகிய நாடுகளில் வளிமண்டலத்தில் காணப்பட்ட தூசிகளும் மணல்புயல்கள் (**SAND STROMS**) அந்நாடுகளில் கூடுதலான நிலங்கள் பாலைவனமாக மாறுவதற்கு காரணமாக அமைந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளனர். இத்னால் பசுமைமிக்க மரங்கள் அங்கு குறைந்துள்ளதையும் அவதானிததுள்ளனர்.



# திமிங்கலத்தின் பொறி

முதுகுப் பக்கத்தில் ஏரியைக் கொண்டுள்ள திமிங்கிலங்கள் (**HUMP BACK WHALES**) மீன்களை எவ்வாறு இரையாக்கிக் கொள்கின்றன என்பது விஞ்ஞானிகளால் புரிந்து கொள்ளமுடியாதிருந்தது.

தற்போது அவற்றின் மர்மங்கள் தெளிவாகியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வகைத் திமிங்கலங்கள் உருளை வடிவில் அமைந்த நீர்க்குமிழிகளை (**CYLINDRICAL COLUMN**) நீருள் உருவாக்குகின்றன. இந்த உருளை வடிவான நீர்க் குமிழிகளுக்குள் சிக்கிய மீன்கள் வெளியேறுவதற்கு முயற்சிக்காது, உள்ளே தொடர்ந்து இருப்பதையும் அவதானித்துள்ளனர். மேலும் இந்தக் குமிழ்களினால் உருவாக்கப்பட்ட தடுப்பை உடைத்துக் கொண்டு வெளியேறாமல் இருப்பதையும் அவதானித்துள்ளனர்.

இங்கிலாந்தின் தென் கம்ரன் பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் ரிம் - ஒலி அதிர்வு (**VIBRATION**) தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வந்தார். மேலும் இவ்வகைத் திமிங்கிலங்கள் தாம் செல்லும் பாதையில் ஒலிச்சமிக்ஞைகளை உருவாக்குவதையும் அவதானித்திருந்தார். இதனால் இந்தத் திமிங்கிலங்களினால் உருவாக்கப்படும் ஒலிச் சமிக்ஞைகளுக்கும், உருளைவடிவிலான நீர்க் குமிழிகளுக்கும் இடையே தொடர்பிருக்கலாமென்பதையும் ஆராய்வதற்கு முயற்சி செய்தார்.

இவரது ஆய்வின் மூலம் நீர்க்குமிழிகளுக்குள் ஒலி அலைகள் மோதி, தெறிப்படைவதால் இவற்றின் மத்தியில் சிக்கிக்கொண்ட மீன்கள் வெளியேற முடியாதுள்ளதாகவும் , இவ்வாறு சிக்கிக் கொண்ட மீன்களை திமிங்கிலங்கள் தமக்கு இரையாக்கின் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

# மீன்களும் பவளப்பாறைகளும்



உலகின் மிகப்பெரிய பவளப்பாறைகள் (**CORAL REEFS**) நீருக்கடியில் அமைந்துள்ள பிரதேசத்தை பாரம்பரிய பிரதேசமாக அவுஸ்ரேலிய அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. மேலும் இந்தப் பவளப்பாறைகள் அமைந்துள்ள பிரதேசம் மீன்பிடித்தலுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது. உல்லாசப் பிரயாணிகள் பார்வையிடுவதற்கு மாத்திரமே அனுமதிக்கப்படவுள்ளது.

பவளப்பாறைக்கருகில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதால் பல கடல் வாழ் உயிரினங்கள் அழிந்துள்ளன.


பல நிறங்களைக் கொண்ட மீன் வகைகளுக்கும் சுறாமீன், ஆமை இனங்களுக்கும் பவளப் பாறைகள் புகலிடம் கொடுத்து வந்துள்ளது. பாரிய கப்பல்கள் இப்பவளப் பாறைகளுக்கு அருகில் பிரயாணம் மேற்கொள்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

அவுஸ்ரே லியாவின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ள குயின்லான்மி மாநிலத்துக்கு அருகில் அமைந்துள்ள கடற்பிரதேசத்தில் இந்த வகையான பாரிய பவளப்பாறைகள் அமைந் துள்ளன. உல்லாசப் பிரயாணிகள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பவளப் பாறைகளால் 975 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானம் கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புதிய கடவுச்சீட்டு

கடவுச்சீட்டுக்களில் நிழல் படங்களே இதுவரை காணப்பட்டன. சர்வதேச விமான நிலையங்கள் மனிதர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு இந்நிழல் படங்களை ஆதாரங்களாக ஏற்றுக் கொண்டன. மேலும் முக அடையாளங்கள் சிலவேளைகளில் ஒருவரை இணங்கண்டுகொள்ள முடியாத சூழலை ஏற்படுத்தியிருந்தன. இதனால் கைரேகைகளையும், வேறு தகவல்களையும் கடவுச்சீட்டுக்களில் உட்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. பயோமெற்றிக் (**BIOMETRIC**) எனப்படும் புதிய முறையில் விரல்களில் காணப்படும் ரேகைகளும், வேறு அடையாளங்களும் மின்னியல் சமிக்ஞைகளாக மாற்றப்பட்டு கடவுச் சீட்டுக்களில் பதிவு செய்யும் முறை உருவாக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டில் இவ்வகையான பதிவு செய்யும் முறைகளை மனிதநேய அமைப்புக்கள் கண்டித்துள்ளன. ஒரு மனிதனின் அடையாளங்களை தீவிரமாக அறிந்து கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்வதன் மூலம் குற்றம் புரிந்தவராக அவர் கருதப்படுவதாக அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்துள்ளன.



இதனால் சர்வதேச விமானப் பயணங்களுக் கான அமைப்பு முக அடை யாளத்தையும் கடவுச்சீட்டுக்களில் ஏற்றுக்கொள்வதென தீர்மானித்துள்ளது. இதனால் எகிப்தின் தலைநகரில் இது தொடர்பாக நடத்தப்பட்ட மாநாட்டில் புகைப்படத்துடன் மின்னியல் முறையிலான கைரேகைகளையும் ஏற்றுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்காவில் செப்ரெம்பர் 11 தாக்குதலின் பின் அந்த நாட்டிற்கு விசா இன்றிச் செல்லக் கூடிய நாடுகளின் பிரசைகளிடமும் மின்னியல் முறையியல் கைரேகைகள் அமைந்துள்ள கடவுச்சீட்டுக்கள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன.

2003 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மின்னியல் தகவல்களை கொண்ட எலக்ரோனிக் சிப் (**ELECTRONIC CHIP**) கடவுச்சீட்டுக்களை அறிமுகப்படுத்தவுள்ளது.



# கையளவு கணினி


மலிவான விலையில் கையடக்கமான கணினிகள் தற்போது சந்தையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஏறக்குறைய 240 அமெரிக்க டொலர்கள் வரை விலைபோகக் கூடிய இவை, 2001 ஆம் ஆண்டில் இந்தியச் சந்தையில் காணப்பட்டன.

ஆனால் அப்போது காணப்பட்ட விலைகள் ஓரளவு முன்னேற்றகரமானதாக இருக்கவீல்லை. இது சிம்பூயூட்டர் எனப்பெயர் பெறுகின்றது. இந்தியாவிலே இந்திய விஞ்ஞானக் கழகம் பெங்களூரில் வைத்து இதனைத் தயாரித்தது. கூடுதலாக 1000 :1 என்ற விகிதத்தில் இந்தியாவிலுள்ள மக்கள் கணினி களின் சொந்தக்காரர்களாக இருக்கின்றார்கள். தற்போது வந் துள்ள சிம்யூட்டர் - கைத்தொலைபேசியளவுக்கு சிறிதாகவும் அத்துடன் பல வசதிகளைக் கொண்டவையாகவும் காணப்ப டுகின்றது.

இந்தியாவில் பாரதி எலட்ரோனிக்கல் நிறுவனம் இப்படியான கருவிகளைச் செய்வதில் தற்போது முன்னிற்கின்றது. ஏறக்குறைய 50, 000 சிம்பூட்டர்கள் விலைபோகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 64 **MB** மெமொறி உண்டு. அத்துடன் மைக்கும் காணப்படுகின்றது. கீபோட்டில் பல வகை மொழிகளும் உண்டு.

# திரை விமர்சனம்

டும் டும் டும், ஜூட் படங்களை இயக்கிய அழகப்பெருமாள் முதன் முதலில் பூஜைபோட்டு இயக்குநராக ஆரம்பித்த படம் ' உதயா'.



பல காரணங்களால் 2 வருடங்களுக்கு மேலாக படத்தயாரிப்பு இழுத்தடிக்கப்பட்டதாலோ என்னவோ இது அவ்வளவாகச் சரியாக இருக்கவில்லை. முறைப்பையனுக்கு விருப்பமில்லாமல் நிச்சயிக்கப்படும் சிம்ரனுக்கும் - லெக்சரர் விஜய்க்கும் காதல் ஏற்படுகின்றது. சிம்ரன் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டது தெரிந்ததும், சிம்ரன் மேல் கோபம் கொண்டு நாகர்கோவிலிருந்து சென்னை வந்து நண்பன் விவேக்குடன் பத்திரிகையில் வேலை பார்க்கிறார். இதற்கிடையே தீவிரவாதிகள் சிலர் விஜயைத் தங்களுடன் இணையுமாறு கேட்கிறார்கள். விஜய் மறுத்துவிடுகிறார்.

## உதயா

இதற்கிடையே ஒரு கும்பல் எரிசாராயம் காய்ச்சியதை அம்பலப்படுத்தியதற்காக விவேக்கைக் கொன்று விடுகிறார்கள். இதனை நிரூபிக்க முடியாமல் விஜய் தவிக்கின்றார். நாசரின் போலிவேஷத்தை நம்பி புதிய வெடிமருந்தொன்றைக் கண்டுபிடித்து, நாசருக்கு விஜய் கொடுக்கின்றார். இதன்மூலம் ரயிலைத் தகர்க்கின்றார்கள். அத்துடன் பொலிஸிடம் விஜயைக் காட்டிக்கொடுக்கிறார்கள்.

நாசரை விஜய் எப்படி அழிக்கின்றார் என்பது மீதிக்கதை. படத்தில் எடிட்டிங் எடுபடவில்லை. வெடிமருந்து தயாரிப்பில் விஜய் ஈடுபடுவது முழுப்புளுடா. நாசரின் வில்லத்தனம் பரவாயில்லை.

விவேக்கின் நகைச்சுவையை ரசிக்கலாம் என்று பார்த்தால், அவரையும் கொன்றுவிடுகிறார்கள். வசனம் சுஜாதாவாம். உண்மையாகவே நீங்களா? நம்பமுடியவில்லை. ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் உதயா உதயா மற்றும் திருவல்கேணி ஆகிய பாடல்கள் கேட்கக் கூடியதாகவுள்ளன.

அழகப்பெருமாள் அழகாக ஏமாற்றியுள்ளார்.

- PNS


# நோய் எதிர்ப்பு மருந்து



பிரித்தானியாவில் குடும்ப வைத்தியர்கள் சிறுவர்களுக்குப் பலவகையான மருந்துகளை சிபார்சு செய்வதை குறைத்துள்ளதாக கணிப்பீடுகள் தெரிவித்துள்ளன. தொடர்ந்து சிறுவர்கள் மருந்துகளைப் பாவிப்பதால் மருந்துகளுக்கு உடலில் எதிர்ப்புச் சக்திகள் அதிகரிப்பதாகவும் தெரிவக்கப்படுகின்றது. தற்போது இருமல், தடிமன் போன்ற நோய்களுக்கு மருந்துகளை சிபார்சு செய்வதை வைத்தியர்கள் நிறுத்தியுள்ளனர். குறிப்பாக பென்சிலின், அமொக்சிசிலின் ஆகியவற்றையும் சிபார்சு செய்வதை பாதியாக குறைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுவாசம் தொடர்பான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும், சில நோய்க்கிருமிகள் முற்றாகவே செயலிழந்துள்ளதாகவும், அதிகளவு மருந்துகளை உட்கொள்வதால் ஏற்படும் விளைவுகளை மக்கள் நன்கு அறிந்துள்ளதாகவும் றோயல் வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் ஜிம் கெனடி தெரிவித்தார்.


# அசுத்தக் காற்று



பெருநாட்டில் காணப்படுகின்ற பாரிய தொழிற்சாலைக் கழிவு வாயுக்களை ஒரு குழாய்களாலான வலையமைப்பு ஒன்றின் மூலம் ஒன்றிணைத்து வெளியேற்றும் திட்டம் சில சிக்கல் காரணமாக கைவிடப்படவேண்டிய கட்டத்திலுள்ளது. இது நிறுத்தப்பட்டதற்கான காரணம் அமேசன் மழைக்காடுகள் இதனால் பாதிக்கப்படும் என்பதுதான். அத்துடன் ஒரே இடத்தில் எல்லாக் கழிவுவாயுக்களும் இணையும்போது மனிதனுடைய சுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இது மட்டுமல்ல இத்தகைய கழிவு வாயுக்கள் செல்லும் குழாய்களில் சில உடைப்புக்கள் ஏற்பட்டால், அது மிகத் தயவிளைவுகளையும் கொண்டுவரும். கடலினடியில் இத்தகைய குழாய்களைச் செலுத்தும் போது அது கடல்வாழ் உயிரினங்களையும் பாதிக்கக்கூடியவாறு அமைகின்றது. ஆனால் இத்திட்டத்திற்கு அமெரிக்க அபிவிருத்தி வங்கி கொடுத்த 75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் பயன்படுத்தப்படாமல் போகப்போகின்றது.

# டிஜிட்டல் தாள்கள்




டிஜிற்றல் தாள்கள் தற்போது பாவனைக்கு வந்திருக்கின்றன. இவை இலத்திரனியல் தொழில்நுட்ப முறைமூலம் தயாரிக்கப்படுகின்றன. சொனி, பிலிப்ஸ் ஆகிய நிறுவனங்கள் இந்தத் தாள் தயாரிப்பில் முன்னிற்கின்ற நிறுவனங்களாகும். அத்துடன் பனியர் நிறுவனமும் இவற்றுடன் இணைந்து தற்போது ஜப்பான் நாட்டில் கிட்டத்தட்ட 375 அமெரிக்க டொலர் செலவில் இந்தத் தாள்களை விற்பனைக்கு விட்டிருக்கிறது.



இதனை முதலில் பத்தகங்கள் கட்டுவதற்குப் பாவித்தனர். காலப்போக்கில் செய்தித் தாள்களிலும் இத்தகைய டிஜிட்டல் தாள்களைப் பாவிக்கலாம் என்ற யோசனையும் இருக்கின்றது. இத்தகைய தாள்களைப் பாவிப்பதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் சிலவும் இருக்கின்றன. முக்கியமாக இது பற்றரியில் இயங்கக்கூடியது. ஆகவே இது செலவை அதிகரிக்கச் செய்கிறது. குறிப்பாக AAA பற்றரி வகைகளே பாவிக் கப்படுகின்றன. அதிலும் தற்போது 'ஈ இங்' நிறுவனம் 10, 000 டிஜிட்டல் பக்கங்களுக்குத் தேவையான ஒரு பற்றரியைத் தயாரித்திருக்கின்றது. அது ஒவ்வொரு 10000 பக்கங்கள் முடியவும் மாற்றக்கூடியதாகவுள்ளது.

# வேற்றுக் கிரகங்களில் மனிதர்கள்




பூமியைத் தவிர மற்றைய கிரகங்களிலும் அறிவுடைய உயிரினங்கள் **(INTELLIGENT LIFE)** வாழ்கின்றனவா என்பதை அறிவதற்கு விஞ்ஞானிகள் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். இதனால் மற்றைய கிரகங்களிலிருந்து வெளியேறும் வானொலிச் சமிக்ஞைகளை ஆராய்ந்துள்ளனர்.

இதனால் சக்தி மிக்க வானொலி தொலை நோக்கிக் கருவிகள் மூலம் கடந்த 10 ஆண்டுகளாக கிரகங்களின் வானொலிச் சமிக்ஞைகளை ஆராய்ந்துள்ளனர். 800 இற்கும் மேற்பட்ட நட்சத்திரங்களில் மேற்கொண்ட ஆய்வுகளில், வேற்றுக் கிரகங்களில் அவ்வாறான உயிரினங்கள் காணப்படவில்லை எனத தெரிவித்துள்ளனர். அண்மையில் 88 ஒலி ஆண்டில் **(LIGHT YEARS)** காணப்பட்ட சக்திமிக்க நட்சத்திரமொன்றை இவர்கள் ஆராய்ந்துள்ளனர்.

அமொரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையம் வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, போனெக்ஷ் திட்டம் **(PHOENIX)** என்ற பெயரில் திட்டம ஒன்றை உருவாக்கியிருந்தது. இத்திட்டத்தின் மூலம் சிறந்த பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்ததால், 1993 ஆம் ஆண்டு இத்திட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. ஆனாலும் இத்திட்டத்தில் பங்கு கொண்ட விஞ்ஞானிகள் அவுஸ்ரேலியாவில் அமைந்துள்ள வேற்றுக் கிரக ஆய்வுத் தொலைநோக்கி மூலம் ஆய்வுகளை மேற்கொண்டனர். வேற்றுக் கிரகத்திலிருந்து வெளியேறும் அலைவரிசைகள் **(RADIO FREEQUENCIES)** நன்கு தெரியாத காரணத்தினால் மாறுபட்ட அலைவரிசையில் சமிக்ஞைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு வானொலி அலை வாங்கிகளை உருவாகக முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் வேற்றுக் கிரகத்தில் உயிரினங்கள் உண்டு என்ற நம்பிக்கையை அவர்கள் இழந்துவிடவில்லை.

# புற்றுநோய்



# புதிய சிகிச்சை

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலங்களை கதிர்வீச்சின் மூலம் அழிக்க முற்படும் வேளையில், அருகில் அமைந்துள்ள கலங்களும் பாதிக்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட கலங்களின் முப்பரிமாண படங்களை நவீன முறையில் **(3 D PICTURES)** கதிர்வீச்சினை கலங்களுக்கு செலுத்தும்போது பார்க்கக்கூடியதாக அமைந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட கலங்களை மாத்திரம் அழிக்க முடியும். மேலும் பாதிக்கப்பட்ட கலங்களில் அதி சக்தி கொண்ட கதிர்வீச்சினையும் செலுத்த முடியும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

புற்றுநோய் சத்திரசிகிச்சையின் பின் கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்ட கலங்களை அழிப்பது சிறந்த முறையாக வைத்தியர்களினால் கருதப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கலங்களை துல்லியமாக இனங்காண்பதன் மூலம் ஆரோக்கியமான கலங்களின் வளர்ச்சிக்கு உதவமுடியும். எனவும் கருதப்பட்டுள்ளது.

இந்த வகையான சிகிச்சை முறைகள் முதலில் கனடா, அமெரிக்கா, நெதர்லாந்து ஆகிய நாடுகளில் உருவாக்கப்பட்டிருந்தன. பிரித்தானியாவில் தற்போது பாவனையில் காணப்படும் புற்றுநோய் சிகிச்சைக்கான கருவிகள் 10 ஆண்டுகளுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்டவை. இவற்றின் மூலம் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்போது பாதிப்படைந்த கலத்திற்கு அருகில் காணப்படும் கலங்களும் அழிக்கப்படுகின்றன. இதனால் அவற்றின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றன.

அரசியல் கண்ணோட்டம் - சுரணிமால

# இறுதித் தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ள அரசியல் குழப்பங்களும், நெருக்கடிகளும்

பதின்மூன்றாவது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் முடிவுகள் நாடாளுமன்றத்தைப் பிரிக்கின்ற குதிரை வியாபாரமாக இருக்கின்றது.

கடந்த 20 வருடப் போரின் பின்பும், கடந்த இரு வருடங்களுக்குப் பின்பும் சமாதான வாக்குறுதியை முன்வைத்து பொருளாதர வளர்ச்சியை மேன்மைப்படுத்த வேண்டும் என்ற கொள்கையுடன் வெற்றி நிச்சயம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுதியாக இருந்தாலும், தேர்தலின் முடிவுகளின் படி பொருளாதார சீர்திருத்தம் என்பது சாத்தியமானாலும், அமைதியும் சமாதானம் என்பதும் சாத்தியமற்றதாகவே தென்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பிரச்சினை என்னவென்றால் ஒரு வலுவான அரசமைப்பை உருவாக்க தனியாகவோ, கூட்டாகவோ 113 ஆசனங்கள் அதற்கு தேவை என்பதேயாகும்.

இன்றைய நிலையில் ஐ.ம.சு.மு, இ.மு.கா. த.தே.கூ., ஜாதிகஹெல உறுமய ,ஈ.பி.டி.பி, மலையக மக்கள் முற்போக்கு முன்னணி ஆகிய கட்சிகளே நாடாளுமன்றத்தைப் பிரதிநிதிப்படுத்துகின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு வலுவான அரசை அமைக்க, தமிழர் தேசியக் கூட்டமைப்புடனும் அல்லது ஜாதிக ஹெல உறுமயவுடனும் சேரவேண்டும் அல்லது அது சிறுபான்மை அரசாவதுடன் அல்லாமல் நாடாளுமன்றத்தில் சட்டங்களை அமுல்படுத்த போதுமான பலமின்றி பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிவரும்.

ஐ.ம.சு.முன்னணி ஒரு வலுவான கூட்டமைப்பு என்று சொல்லப்பட்டாலும், மேலே சொன்னது போல சட்டங்களை அமுல் செய்யும்போது தோல்வியையே அடையவேண்டிவரும். ஜனாதிபதி வேறொரு தேர்தலை ஒரு வருடத்துக்குள் கொண்டுவர முடியாது. இப்படியாக யாரும் குறைந்தது 113 ஆசனங்களை அமைக்க முடியாத பட்சத்திலும் சட்டங்களை அமுல் நடத்த சாத்தியமில்லாத சூழ்நிலையிலும் நாடாளுமன்றம் ஒரு வருடம் சகடயோகத்தில் ஓடவேண்டிய சூழ்நிலை அமைவதுடனும், அதன் பின்பு நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிதாக 113 ஆசனங்களை கைப்பற்ற தேர்தலொன்று உருவாகும்.

ஜனாதிபதி எப்படி 113 ஆசனங்களாலான ஒரு நாடாளுமன்ற சபையை அமைப்பாரா என்பதும் அத்தோடு பொருளாதார சீர் அமைப்பையும் சமாதான பேச்சுவார்த்தையையும் கொண்டு நடத்தப் போகிறார் என்பதும், புதிரான கேள்விகளாக இருக்கின்றது. அத்தோடு இந்தப் பிரச்சினைகளுடன் ஜனாதிபதி எப்படி குறைந்தது ஒரு வருடத்துக்காவது காலத்தை போக்கப்போகிறார் என்பதும் இன்னுமொரு கேள்விக்குறியாக இருக்கிறது.

இந்த நிலையில் தமிழர் தேசியக் கூட்டமைப்பே முக்கிய சக்தியாகக் காணப்பட்டது. அது ஐ.ம.சு.முன்னணியுடன் முரண்படும் தன்மை கொண்டதாகவுள்ளது. காரணம் ஜே.வி.பி, ஐ.ம.சு.முன்னணி பிரதான அங்கம் வகிப்பதேயாகும்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு உதவுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரப்படுவதாக யாழ். தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொன்னதுடன் இந்த இணைப்பு - நடந்து, தடைப்பட்டுள்ள அமைதிக்கும் சமாதானத்துக்குமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து செல்லும் எனவும் வலியுறுத்தியுள்ளார். அத்தோடு ஐ.தே.முன்னணி, த.தே.கூட்டமைப்பு என்பன சம்பிரதாயமற்ற பேச்சு வார்த்தையை நடாத்தியுள்ளது. சமாதான பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளது. சமாதான பேச்சுவார்த்தைகளைப் கொண்டு நடத்துவதற்காக முஸ்லிம் காங்கிரஸினை கூட்டுச் சேர்ப்பதையும் ஐ.தே. முன்னணி கவனத்திற்கு எடுத்துள்ளது.

ஐ.ம.சு.முன்னணியுடன் புலிகளின் ஆதரவிலான த.தே.கூட்டமைப்பு சேருமாயின் வலுவான நாடாளுமன்ற அமைப்பை உருவாக்கலாம். ஆனால் , இந்த செயற்பாடு ஐ.ம.சு.முன்னணியில் இருந்து ஜே.வி.பி பிரியும் சாத்தியக்கூற்றைக் காட்டும். அத்தோடு த.தே.கூட்டமைப்பு ஐ.ம.சு.முன்னணியில் எதை எதிர்பார்க்கப்போகிறதென்பது அடுத்த கேள்விக்குறியாகவுள்ளது.

**சந்திரிகாவினதும் ஐ.ம.சு.முன்னணியினதும் தேர்தல் வாக்குறுதிகளில் - உரங்கள் வழங்குவதாகவும், 50 ஆயிரம் புதிய உத்தியோகங்களை ஒருமாத காலத்துக்குள் வழங்குவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த எங்கிருந்து பணம் வரப்போகிறது... எந்த நாடுகள் இதற்கு உதவி வழங்கவுள்ளன... அவை பொருளாதார சீர்திருத்தத்தையும் தனியார் மயப்படுத்தலையும் வலியுறுத்துகின்றனவா என்பதும் மற்றொரு கேள்வியாகும்.**

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் எடுத்துக் கொண்ட குறிக்கோள்களான -

- ☆ தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள்
- ☆ பேச்சுவார்த்தைகளை தொடர்தல்
- ☆ வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகம் போன்ற கொள்

கைகளை விட்டுக் கொடுக்கமாட்டாது.

இதனால் ஐ.ம.சு.முன்னணியுடன் ஜே.வி.பி செய்துகொண்ட உடன்படிக்கை உடைவதுமல்லாமல் ஐ.ம.சு.முன்னணியின் பலம் குறையும் சாத்தியமும் உண்டு. அத்தோடு ஐ.ம.சு. முன்னணிக்கு ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவும் கிடைக்காமல் போய்விடும்.

ஜே.வி.பியின் உடைவை ஐ.ம.சு.முன்னணி ஒருபோதும் ஏற்காது. இதனால் த.தே. கூட்டமைப்பின் ஆதரவை அது பெறமுடியாது. அத்தோடு த.தே.கூட்டமைப்பு, ஐ.தே.முன்னணி தொடங்கிய பேச்சுவார்த்தைகளில் இருந்து விலகப் போவதுமில்லை. அத்தோடு, இந்த பேச்சுவார்த்தைகள் ஐ.தே.முன்னணியினால் நடாத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஐ.ம.சு.கூட்டணி த.தே.கூட்டணியுடன் சேரும் சாத்தியம் என்பது நடக்காத ஒன்றாகும். எனவே, ஐ.ம.சு.முன்னணி, ஜாதிக ஹெல உறுமயவுடன் கூட்டமைக்கும் சாத்தியத்தைப் பார்ப்போம். ஜே.வி.பியும், ஜாதிக ஹெல உறுமயவும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவுள்ளதை குறிப்பிடுவதுடன் பௌத்த பிக்குகளுக்கான ஐ.ம.சு.முன்னணியின் எதிர்பார்ப்பையும் குறிப்பிடவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் ஜாதிக ஹெல உறுமய ஐ.ம.சு. முன்னணியை தம்முடன் கூட்டமைப்பை உருவாக்க அழைப்பார்கள் என எதிர்பார்க்கிறது.

இது ஐ.ம.சு.முன்னணிக்கு மிகப்பாரிய பிரச்சினையாக உள்ளது.

ஐ.ம.சு.முன்னணி - த.தே.கூட்டணியுடன் சேர்ந்தாலும் அல்லது ஜாதிக ஹெல உறுமயவுடன் சேர்ந்தாலும் அது ஜே.வி.பியுடனான உடன்படிக்கைக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதால் அவர்களால் ஒரு பௌத்த தர்மராட்சியத்தை உருவாக்க முடியாது.

எனவே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் சாத்தியமில்லை என்றே கூறவேண்டும். குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி நிர்வாகசபை உருவாக்கம் சாத்தியமில்லை. நோர்வேயின் சமாதான நடவடிக்கைகளும் சாத்தியமில்லை. ஆனால், தனியான புத்ததேசம் என்பதே சாத்தியமாகப் போகிறது. இதனால் பழையபடி குமாரதுங்க குழறுபடியான ஒரு அரசியல் சிக்கலை எதிர்கொள்ளவேண்டிவரும்.

இப்படியான நிலையில் ஐ.ம.சு.முன்னணி ஒருவருடனும் கூட்டுச்சேர முடியாத நிலையில் போரினையும் பொருளாதார பெருங்குழப்பத்தையும் எதிர்பார்க்கும் என்பது உறுதி.

இ.தொ.காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்டு, தன்னுடைய பூரண ஆதரவு அவருக்கு உண்டென்றும், இந்த இக்கட்டான காலகட்டத்தில் தான் எக்காரணத்தைக் கொண்டும் தனது ஒத்துழைப்பைக் கைவிடமாட்டேன் என்றும் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதியின் முழுக்காலமும் அரசியல் யாப்பை மாற்றியமைப்பதுடன், இ.தொ.காங்கிரஸுடன் பேரம்பேசி அரசியலை நடத்துவதுடனும் மையம் கொண்டுள்ளது. அரசியல் யாப்பில் ஜனாதிபதியின் அதிகாரத்தையும் தேர்தல் முறையையும் மாற்றுவதே ஜனாதிபதியின் முக்கிய குறிக்கோளாகும்.

இப்படிப் பார்க்கும்போது மறுதேர்தல் 2005 இலும். மறுதேர்தல் 2006 இலும் நடைபெறும். அத்தோடு, புதிய வேட்பாளர்களை - கட்சிகள் இப்போதிருந்து தேடவேண்டிய கட்டமும் வரும்.

குமாரதுங்க தோல்வியடையும் பட்சத்தில் அவர் ஜே.வி.பியின் பலத்தைப் பலப்படுத்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கடுமையாக மோதச் செய்வார். இது நீண்டகால திட்டமாக அமையும். இவற்றைப்பார்க்கும் போது குமாரதுங்காவின் தனிப்பட்ட அரசியல் இலாபத்தையும் அவாவையும் வெளிப்படுத்தியுள்ளது.

அதேநேரத்தில் குமாரதுங்க - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் அவர்களால் கைவிடப்பட்டுள்ளார். ஹக்கீம் ஜே.வி.பியுடன் இணையவும் மாட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் பேரியல் அஷ்ரப் அத்தோடு ஹக்கீம் என்பவர்கள் முஸ்லிம் மக்களின் அமைதிக்கும் சமாதானத்திற்குமாக குரலைக் கொடுப்பவர்கள் என்பது மற்றொரு கேள்வியாக எழுந்துள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைக்கும் முன்பு பொருளாதார சீர்நிலை வருவதற்கு இடையில், ஒரு குறுகிய தேர்தலை நடாத்தி மக்களை பெரிய குழப்பத்திலும் அமைதியற்ற நாட்டை உருவாக்க ஜனாதிபதி முயல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஐ.தே.கட்சியின் பெரும்பான்மைப் பலமுள்ள இருவருட ஆட்சியை கலைத்ததுடன், ஒரு குறைபாடுமிக்க நிலையற்ற புது அரசியல் சூழலை உருவாக்கிய சந்திரிகா சமாதானத்திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டை இட்டுள்ளார்.

இந்தக் காலகட்டத்தில் புதிய அரசியல் என்பது புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளைத் தாமதப்படுத்துவதுமல்லாமல் அதைப் பலமற்றதாக்கவும் செய்யும். அத்தோடு புலிகள் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பால் பலப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஐ.தே.கவும் புலிகளும் செய்துகொண்ட புரிந்துணர்வு உடன்பாடுதான் ஸ்ரீ.சு.கட்சியையும் ஜே.வி.பியையும் ஒன்றிணைத்து நாடாளுமன்றத்தைக் கலைத்ததாகச் சொல்லலாம்.

பலம் குறைந்த நாடாளுமன்ற அமைப்பு புலிகளுடன் எப்படிக் கதைப்பார்கள் என்பதும், அவர்களுடன் எப்படிப் பேரம் பேசப்போகிறார் என்பதும், புலிகளின் தேவைகளுக்கும் அவர்களின் கொள்கைகளுக்கும் எப்படி முகம் கொடுக்கப் போகிறார்கள் என்பதும், பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது. மேலே சொன்னவை சாத்தியமற்ற பட்சத்தில் மீண்டும் போர் மூளுவது தவிர்க்கமுடியாதது.

சந்திரிகாவினதும் ஐ.ம.சு.முன்னணியினதும் தேர்தல் வாக்குறுதிகளில் உரங்கள் வழங்குவதாகவும், 50 ஆயிரம் புதிய உத்தியோகங்களை ஒரு மாத காலத்துக்குள் வழங்குவதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இந்தத் தேர்தல் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த எங்கிருந்து பணம் வரப்போகிறது என்பது மற்றொரு கேள்வி. எந்த நாடுகள் இதற்கு உதவி வழங்கவுள்ளன என்பதும், அவை பொருளாதார சீர்திருத்தத்தையும் தனியார் மயப்படுத்தலையும் வலியுறுத்துகின்றனவா என்பதும் மற்றொரு கேள்வியாகும். இதனை ஜே.வி.பி கடும் சினத்துடன் எதிர்நோக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரிகா அமைக்கும் அரசுடன் ஜே.வி.பி எவ்வளவு தூரம் உறுதியாக ஒத்துழைக்கும் என்பதும், ஜே.வி.பியின் எதிர்பார்ப்புக்களை சந்திரிகா எப்படி பிறநாடுகளின் உதவியில்லாமல் சமாளிக்கப் போகிறார் என்பதும் பெரியதொரு புதிர்.

புலிகளே தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஐ.ம.சு.முன்னணி மறுப்பதுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையிட்டு வெளிநாட்டின் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியும் கைநழுவிப் போகும்நிலைகூட உருவாகியுள்ளது.

ஐ.தே.முன்னணி ஒருவாறு தீர்வைக்காண முயற்சிக்கும் போது, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திடீரென்று நாடாளுமன்றத்தை கலைப்பதால் பெரிய குழப்பத்தையும் மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படத்தியுள்ளார். ☆

ஆங்கிலமூலம் - சுரணிமால
தமிழில் - ஸ்ரீகுமரன்
நன்றி - சண்டே லீடர்

உரிமைக் களம் க.ஐங்கரன்

# புதிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு சில வார்த்தைகள்...

வடக்கு - கிழக்கு முழுவதும் தமிழரசுக்கட்சி அமோக வெற்றியை பெற்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் ஏகப்பிரதிநிதிகள் என்பதையும் அந்த அமைப்பின் தலைமைத்துவத்தையும் ஏற்றுக்கொள்வதுடன், சுயநிர்ணயம், தமிழர் தாயகக் கோட்பாடு, அரசியல், அதிகாரம் போன்ற விடயங்களைத் தமிழ் மக்கள் ஏற்று, தமது அபிப்பிராயங்களை தேர்தலில் வெளிப்படுத்தியுள்ளனர். இது தமிழ்த் தேசியத்துக்குக் கிடைத்துள்ள வெற்றியென்பதை மறுக்கமுடியாது. இந்த வெற்றியைப் பெற்ற தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரும் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராசா அவர்கள் வாக்காளருக்கு நன்றி தெரிவித்துள்ளார். அவர் சார்பிலும் வாக்குகளைப்பெற்று வடக்கு - கிழக்கில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு உரிமைக்களம் சில அடிப்படை விடங்களை நினைவுபடுத்த விரும்புகிறது.

ஒன்று நீங்கள் எல்லோரும் (வெற்றி பெறறவர்களும், தோல்வியைத் தழுவியவர்களும் இதற்காக உழைத்தவர்களும்), ஒரு கொள்கைக்காக ஒன்றிணைந்தமைக்காக - உரிமைக்களம் நன்றியும், பாராட்டும் தெரிவித்துக்கொள்ளும் அதேநேரம், உங்களுக்குரிய கடமைகளை நீங்கள் ஒவ்வொருவரும் உரிமையை நிலைநாட்ட கொடுத்த உத்தர வாதங்களையும் உரிமைக்களம் ஒருபோதும் மறக்காது என்பதையும் நினைவுபடுத்துகிறது. ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களது பணிகளையும் உரிமைக்களம் உற்று அவதானித்துக்கொண்டே இருக்கும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்துகிறது. நீங்கள் கொடுத்த உத்தரவாதங்களையும், கடமைகளையும் செவவனே ஆற்றுகின்றபோது, பாராட்டுவதைவிட (அது உங்களது கடமை) நீங்கள் உங்கள் கடமைகளையும், உரிமைக்கான கொள்கைகளையும், உத்தரவாதங்களையும் மீறுகின்றபோதும் நிராகரிக்கப்படுகின்றபோதும் பகிரங்கமாக உங்களை விமர்சிக்கும் என்பதை உரிமைக்களம் தெரி வித்துக்கொள்கிறது.

அத்தோடு, தமிழ் மக்களை வாக்குகளுக்காக மட்டும் பயன்படுத்துகின்ற பாரம்பரியமான வரலாற்றை உரிமைக்களம் நிராகரித்ததுடன், தேர்தல் காலத்தில் எப்படி உங்கள் கால்களும் உடல்களும் இந்த மக்களை நோக்கிச் சென்றதோ அதேபோன்று, மீதிக்காலத்திலும் உங்கள் செயல்கள் தொடரவேண்டும் என உரிமைக்களம் விரும்புகிறது. ஒவ்வொரு தமிழனுக்காகவும் நீங்கள் செய்யவேண்டிய கடமைகள் அதிகமுண்டு. உங்களால் இயலாததை உரிமைக்களம் செய்யுமாறு கோராது. ஆனால் செய்யக்கூடியதை - உங்கள் உறவினருக்கும் நண்பர்களுக்கும் மட்டும் செய்வதைத் தவிர்த்துவிட்டு, உண்மையாக தமிழினத்தின் சேவையாளனாக கடமையை ஆற்றுபவனாக மாறத் தவறுவீர்களாயின் அடுத்த தேர்தல் களத்தில் மட்டுமல்ல தமிழினத்தின் வரலாறு முழுவதும் உங்கள் பெயர்களில் நீங்களே இழக்கவேண்டிய நிலைக்குள் உரிமைக்களம் உங்களை விமர்சிக்கும்.

தமிழர்களின் வாழ்வியலிலும், உரிமையிலும் ஏற்பட்டுள்ள மிகமோசமான நெருக்கடிகளை மறந்து விடாது செயல்படுங்கள். வறுமை, வேலையின்மை, பொருளாதாரசுமை, கல்வியறிவின்மை, போசாக்கின்மை, சுரண்டல், ஏமாற்றுதல், போலித்தனம், விருத்தியின்மை போன்ற வாழ்வியல் பிரச்சினைகளை நீங்கள் முன்நிறுத்தாதபோதும் தமிழ் மக்களுக்கு அப்பிரச்சினைகள் எதுவும் இல்லை என்பதல்ல. அவற்றை இயன்றவரை நீக்க முயல்வது உங்கள் கடமைகளில் ஒன்றல்லவா?

அவ்வாறே தமிழ் மக்கள் முன்னுள்ள அரசியல் பிரச்சினைகளையும் அது தொடர்பான விழிப்பற்ற தன்மையையும் தேர்தல் காலத்தோடு முடித்துவிடாது தொடருங்கள்.

அரசியல் ஏமாற்றுத்தனத்தை அம்பலப்படுத்துங்கள். ஆட்சிக்கு எதிராகக் குரல் கொடுப்பதல்ல உங்கள் கடமை.

ஆட்சியில் இருப்பவர்களின் பலவீனங்களைச் சுட்டிக்காட்டுவதிலும் பார்க்க, தமிழர்களின் உரிமைப் பிரச்சினைகள் சர்வதேச அங்கிகாரத்தைப் பெறுவதற்குரிய அணுகுமுறைகளைத் திட்டமிட்டு முன்னெடுங்கள். அமைதியாக சமாதானமாக உங்கள் வார்த்தையில் சொன்னால் - மின்னாது முழங்காமல் திட்டமிட்டு எல்லோரும் கூட்டாக ஒன்றிணைந்து உரிமைக்கான போராட்டத்தை சர்வதேச மயப்படுத்துங்கள். விருப்பு வாக்குக்காக ஒரேகட்சிக்குள் போட்டிபோட்டதை இன்றோடு மறந்துவிடுங்கள். நாடாளுமன்றத்திலும் அனுபவசாலி, இளையவர், அவர் வேறு கட்சிக்காரர் என்ற உணர்வுகளை அடியோடு கைவிட்டுவிடுங்கள்.

உங்களிடம் அதிகமாகத் தமிழ் சமூகம் எதிர்பார்க்கிறது. மிக நீண்டகாலமாக அரசியலை நடத்தியவர்கள் ஏற்படுத்திய ஏமாற்றுத்தனத்தால் வெறுப்படைந்துபோன தமிழ் மக்கள் இனியாவது அதனைச் சரிவர மதிப்பீடு செய்ய உதவுங்கள். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாரன் கூறியது போல் 'நான்பெரிது நீ பெரிது எனப்பாராது நாடு பெரிதென' நினையுங்கள். மீண்டும் உரிமைக் களத்தில் சந்திப்போம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வருமுன்னர்க் காவாதன் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அமையப்போகும் புதிய அரசு எதிர்கொள்ளப் போகும் சவால்கள்...

இலங்கையின் புதிய நாடாளுமன்றம் யாரின் தலைமையில் அமைக்கப்படவுள்ளது என்ற கேள்வி ஒரு புறமிருக்க, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தான் இந்தத் தேர்தலில்- அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாவிட்டாலும், அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்ட கட்சி என்ற வகையில் புதிய பிரதமரை தேர்ந்தெடுப்பதிலும், புதிய அமைச்சரவையை உருவாக்குவதிலும் மட்டுமல்ல, புதிய அரசுக்குத் தேவையான ஆட்பலத்தைப் பெருக்குவதிலும் தனது முயற்சிகளை திரைமறைவில் மேற்கொண்டு வருகின்றமை வெளிப்படையாகும்.

பதவிகளுக்காக வாயைப் பிளந்தபடி, தம்மை நாடும் கட்சிகளுடன் எப்போதுமே சுயநலத்தின் அடிப்படையில் பேரம் பேசுவதற்கு தயாராக இருக்கும் சபலப் பேர்வழிகளும், சந்தர்ப்பவாத - கொள்கையற்ற கட்சிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள தயாராகவே உள்ளன என்பதையும் சொல்ல வேண்டியதில்லை. இலங்கை அரசியலுக்கு இதுவொன்றும் புதிய விடயமல்ல... ஒரு நீண்ட நெடுங்கால பாரம்பரியமே.

இந்தப் பாரம்பரியம் காலத்திற்குக் காலம் புதிய புதிய சுயநலமிகளையும், சந்தர்ப்பவாத இனவிரோதிகளையும், கொள்கை மாறிகளையும் மட்டுமல்ல விதேசிய ஆதரவு அடிவருடிகளையும் கூட மக்களுக்கு இனங்காட்டியே வந்துள்ளது.

இந்தப் புதிய அரசு அமைக்கும் நடவடிக்கைகளிலும் இவர்களில் சிலர் இனங்காணப்படவே செய்வர்.

எது எப்படியானாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் ஆட்சியமைக்கும் முயற்சியில் முன்னணியில் நின்றாலும், ஐ.தே.முன்னணியும் முயற்சி எடுக்காமல் உள்ளது எனக் கருதிவிடமுடியாது.

பலவீனமான நிலையில் வெளி ஆதரவுப் பலத்தை நம்பி ஆட்சியைப் பொறுப்பேற்க ரணில் தயங்கினாலும், அறுதிப் பெரும்பான்மையைப் பெற அடுத்த கட்சிகளில் உள்ளவரை தன்னுள் வாங்கிக்கொள்ள பிரயத்தனம் செய்யும் சந்திரிகா கூட்டணியினரின் பலவீனத்தையும் ரணில் புரிந்துகொண்டே தனது காய்களை நகர்த்த முற்பட்டுள்ளார் போல் தெரிகிறது.

ஐ.தே.முன்னணியில் உள்ள சபல புத்தி சந்தர்ப்பவாதிகளான இ.தொ.காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களை தன்வசப்படுத்தும் தீவிர பேரம் பேசல் முயற்சிகளில் ஐ.ம.சுதந்திர முன்னணியினர் முனைப்புடன் ஈடுபட்டுவருகின்றனர் என்பது வெளிப்படையான விடயமே. இதேவேளை, இத் தேர்தலில் முதன் முறையாகப் போட்டியிட்ட சிங்கள பௌத்த இனவாத மற்றும் அடிப்படைவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமயவினர் தாம் பெற்ற குறிப்பிடத்தக்க வெற்றி காரணமாக உற்சாகமடைந்த நிலையில் பௌத்த சிங்கள ராஜ்ஜியத்தை அமைக்க உதவுவோருக்கு தாம் தமது ஆதரவை அளிக்கத் தயார் என்று கூறியிருப்பதை கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

ஆட்சியை அமைக்கும் எந்த முன்னணிக்கும் இந்த ஹெல உறுமயவினரின் ஆதரவு மிக அவசியமானது என்பதை அரசியல் அறிந்தோர் அறிவர். பிக்குகள் தலைமையிலான ஹெல உறுமய கட்சியின் ஆதரவில்லாமல் ஒரு பேரினவாதக் கட்சி ஆட்சியை அமைக்காது. அவர்களின் ஆசீர்வாதமில்லாமல் ஆட்சியை அமைக்கவே முடியாது என்பது நிராகரிக்கப்படமுடியாத உண்மையாகும்.

ஏற்கனவே சமாதான விரோத - பேரினவாத சிந்தனையாளர்களைக் கொண்ட ஐ.ம.சுதந்திர முன்னணிக்கு இந்தப் பிக்குகள் கட்சியின் ஆதரவு சுலபமாகக் கிடைக்கலாம்.

அப்படிக் கிடைத்தால் ஐ.ம.சுதந்திர முன்னணியினர் உறுதியான ஆட்சியொன்றை நிச்சயமாக அமைக்கமுடியும். ஆனால், அவர்களால் உறுதியான சமாதானத்துக்கு உத்தரவாதமளிக்கவே முடியாது.

பௌத்த சிங்கள சாம்ராஜ்யத்தை உருவாக்க முனைவோரை பக்கத்தில் வைத்துக்கொண்டு தமிழ் மக்களின் உரிமைகள் குறித்த பேச்சுவார்த்தையை வெற்றிகரமாகப் பேசுதல் சாத்தியமற்ற விடயமே.

இதேவேளை, ஐ.ம.சுதந்திர முன்னணி அரசு யார் அதிகாரமற்ற வெற்றுப் பிரதமராகப் பதவியேற்பது என்பது குறித்தும் சர்ச்சைகள் முடியவில்லை. கதிர்காமரை பிரதமராக்குவதன் மூலம் அவரை கோடரிக் காம்பாகப் பயன்படுத்தி தமிழினத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் சந்திரிகாவின் மூலோபாயத்திற்கு உட்கட்சி எதிர்ப்பு இருப்பதாகவே தெரிகிறது.

பொம்மைப் பதவியானாலும் - இரண்டாம் நிலை அரசுப் பதவி ஒரு தமிழருக்கு (!?) கொடுப்பதா என இனவாதிகள் குமுறுவதாகவும் கூறப்படுகிறது.

இதேசமயம் அமைச்சுப் பங்கீட்டில் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், மோதல்களால் ஐ.ம.சுதந்திர முன்னணிக்குள் ஏற்படப்போகும் உட்கட்சி அதிருப்தியாளர்கள் மனோநிலையே ஐ.தே.முன்னணி எதிர்காலத்தில் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடும்.


எதுவானாலும் அமையப்போகும் புதிய அரசு தனது ஸ்திரத்தன்மையைக் காப்பாற்ற பல்வேறு சவால்களை எதிர்நோக்கவே செய்யும் இந்தச் சவால்கள் நிச்சயமாக சாதாரணமாக இருக்கப்போவதில்லை.

ஆட்சிபீடம் ஏறும் எந்த அரசுக்கும் மிகப்பெரும் சவாலாக இருக்கப்போவது சமாதானமே...

அந்தச் சவாலை எந்த அரசும் சமாளிக்கும் திறன் கொண்டதாக இருக்கும் என்று தோன்றவில்லை.

அதை மட்டும் இப்போதைக்கு கூறிவைக்க முடியும்.

# நாடும் நடப்பும்




# ஆலோசனை சபையாக செயற்படவே விரும்புகிறோம்

## ஜாதிக ஹெல உறுமய

எந்தவொரு அரசுக்கும் ஆதரவளிப்பதில்லை என்ற எமது முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை என ஜாதிக ஹெல உறுமய கூறியுள்ளது.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்ந்தும் தமக்கு ஆதரவு வழங்குமாறு வலியுறுத்தி வருவதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவிக்கிறது.

அரசாங்கத்துக்கு ஆதரவளிக்காமல், தனித்து நின்று நாடாளுமன்றத்தில் ஒரு ஆலோசனை சபையாகச் செயற்படுவதையே தாம் விரும்புவதாக அவர்கள் கூறுகின்றார்கள்.

இலங்கையில் பௌத்த இராச்சியத்தை உருவாக்குவதன் அடிப்படை அச்சமே இதுவென்றும் அரசாங்கம் அமைச்சுக்கு அழைப்பு விடுவதற்கு தாம் நேரடியாகச் செல்லமுடியாது என ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தை தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் போட்டியிட்ட இந்தக் கட்சி ஏழு ஆசனங்களைப் பெற்றுள்ளது. 2 ஆசனங்கள் தேசியப்பட்டியல்மூலம் கிடைத்துள்ளது.

இலங்கையின் நாடாளுமன்றத்தில் முதன்முறையாக பௌத்த பிக்குகள் போட்டியிட்டு 3 ஆசனங்களைப் பெற்றுள்ளமை வரலாற்று நிகழ்வாகப் பதியப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய சுயாதீனமாகச் செயற்படும் என்ற முடிவில் மாற்றமிருக்காது என்றும் கூறப்படுகின்றது. (01)

# வெளியிணைப்பு இயந்திரங்களை தொழிலுக்கு பயன்படுத்த அனுமதி

வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் 40 குதிரைவலுவைக் கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களைத் தொழில் நடவடிக்கைகளில் பயன்படுத்த இராணுவத்தரப்பு அனுமதியளித்துள்ளது.

எனினும், பொருத்தப்படும் வெளியிணைப்பு இயந்திரங்களின் வலு 40 குதிரைவலுவிற்கு மேற்பட்டதாக அமைந்திருக்கக்கூடாதெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு மீனவசங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் படை அதிகாரிகளுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை இராணுவமுகாமில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனிடையே, அண்மையில் பருத்தித்துறை முனைக்கடற்பரப்பில் கடற்படையின் ரோந்துப் படகால் மோதப்பட்டு உள்ளூர் மீனவர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறையிலுள்ள வடபிராந்திய கடற்படைத் தலைமையக அதிகாரிகள் விரைவில் மீனவ சங்கப்பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தச்சந்திப்பின்போது கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் - கடற்படையினரால் தாக்கப்படுகின்றமை மற்றும் இந்திய மீனவர்களது அத்துமீறல்கள் தொடர்பாக பேச்சுக்களை நடத்தப் போவதாக மீனவர்சங்கங்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (202)

# மொனறாகலை வெடிவிபத்து பொதுமகனொருவர் படுகாயம்

மொனறாகலை மாவட்டத்திலுள்ள செவனகலை பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிவிபத்தொன்றில் ஒரு பொதுமகன் இறந்தும் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை நான்கு மணிக்கு இடம்பெற்றுள்ளது. கிரனைட் ஒன்று வெடித்ததனாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மொனறாகலைப் பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு

யாழ்.போதனா வைத்தியசாலையில் சில அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலை வட்டாரங்களிருந்தே இந்தத் தகவல் கிடைத்துள்ளது.

இதுவரைகாலமும் காலாண்டு அடிப்படையில் வழங்கப்பட்டுவந்த மருந்துகள், தற்போது தேவைக்கேற்ப இரு வாரங்களுக்கு ஒருமுறை வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வாறிருந்தும் இரு வாரங்களுக்காக அனுப்பப்படும் மருந்துகளில் அத்தியாவசியமான மருந்துகள் சில அனுப்பப்படுவதில்லை.

அதிலும், குறிப்பாக நோய்த் தடுப்பு மருந்துகள் பல கிடைக்காமையால், காய்சசல் மற்றும் சளி சம்மந்தப்பட்ட நோய்களுக்கு உடனடியாக வழங்கவேண்டிய சில மருந்துகள் வழங்கப்படமுடியாதநிலை தோன்றியுள்ளது.

திருகோணமலை, வவுனியா முதலான மாவட்டங்களிலுள்ள மாவட்ட மருத்துவமனைகளிலேயே இத்தகைய மருந்துகள் கடனடிப்படையில் பெறப்பட்டு, நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலமாக சேலைன் தட்டுப்பாடும் ஏற்படத்தொடங்கியுள்ளது. குறிப்பாக கடந்த மாதம் முதல் சேலைன் போதியளவில் கையிருப்பில் இன்மையால், நோயாளருக்கு போதியளவு சேலைன் வழங்குவதிலும் சிக்கல் உருவாகியுள்ளது.

இதனைவிட, மருந்து கட்டுதல் மற்றும் முறிவு, நெரிவு சிகிச்சை வழங்குதல் முதலானவற்றிற்குத் தேவையான பன்டேச் மற்றும் மருந்துவகைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இத்தகைய தட்டுப்பாட்டு நிலையினை நீக்குவதற்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் மருந்துக்களஞ்சியப் பொறுப்பதிகாரிகள் முயன்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

தேர்தல் 2004 உணர்த்தும் செய்தி... எஸ்.எம்.ஜி

# 1956 - 2004 ஆம் ஆண்டுகளின் தேர்தல்கள்; வரலாற்று தவறுகள் தொடரப் போகின்றதா?

ஜனாதிபதி சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1956 ஆம ஆண்டு மூன்றாவது பொதுத்தேர்தலில் பெரு வெற்றியைப் பெற்று, ஆட்சிபீடத்திற்கு வந்த



நிலையில்தான், இன்று 13 ஆவது நாடாளுமன்றத்திற்கு நடந்துமுடிந்த பொதுத் தேர்தல் நிலையும் இருக்கின்றது.

பிலிப் குணவர்த்தன, டொக்டர் தகநாயக்க போன்ற இடதுசாரித் தலைவர்களையும், இறியகொல்ல, கே.எம்.பி.ராஜரத்தின போன்ற இனவாதிகளையும் சேர்த்து, எம்.ஈ.பி. என்ற மக்கள் ஐக்கிய முன்னணியை உருவாக்கிய பண்டாரநாயக்க - ஆட்சிக்கு வந்த இருபத்து நான்கு மணிநேரத்துக்குள் சிங்களத்தின் ஆணையை ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி அளித்து, தேர்தலில் போட்டியிட்டார்.

தேர்தல் பிரசாரத்தில் இனத்துவேசம் கனல்கக்கியது. இதற்கு ஈடுகொடுப்பதற்காக சேர் ஜோன் கொத்தலாவல - யாழ்ப்பாணத்தில் தமிழுக்கும் அந்தஸ்து என்று, கொடுத்த வாக்குறுதியையும் காற்றில் பறக்கவிட்டு, 'சிங்களம் மட்டும்தான்' ஆட்சி மொழியென்று யு.என்.பி. பிரசாரம் செய்தது. பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் கோஷம் - எம்.ஈ.பியை அமோக ஆதரவுடன் ஆட்சிபீடத்திற்கு மாற்றியது.

மக்கள் வழங்கிய ஆணையின்படி, சிங்களம் மட்டும் மசோதாவை பண்டாரநாயக்க நாடாளுமன்றம் கொண்டுவருவதற்கு அனுமதி கொடுத்தார்.

இதேசமயம் - இதே பொதுத்தேர்தல் தமிழ்மக்களின் தாயகமான வடக்கு - கிழக்கில் தமிழ்மொழிக்கு சிங்களத்துடன் சமஅந்தஸ்துப் பெறவும், தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் சமவுரிமையுடன் வாழவும், இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஆட்சி அமைப்பை உருவாக்கவும், தமிழ் மக்கள் (முஸ்லிம்களும் தமிழர்களே) தங்கள் பிரதிநிதிகளுக்கு ஆணையை வழங்குகின்றனர்.

1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி சிங்களம் மட்டும் மசோதாவை பண்டாரநாயக்க நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தார். மக்கள் தமக்கு அளித்த ஆணையை நிறைவேற்றுவதாக அவர் தெரிவித்தார்.

இந்த சமயத்தில் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களுக்கு அளித்த ஆணையை நிறைவேற்றுவதற்காக, சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்து நாடாளுமன்றத்துக்கு வெளியே நாடாளுமனறப் படிக்கட்டுகளில் அமைதியாக அமர்ந்து உண்ணாவிரதமிருந்து, சாத்வீகமாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு தமிழரசுக்கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக்கட்சிகள் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும், தொண்டர்கள் சிலரும் நடாளுமன்றத்தை நோக்கி நடந்தனர்.

ஆனால், எந்த மக்களின் ஆணையையும் பெறாமல் ஆளுங்கட்சிப் பிரதிநிதிகள் சிலரின் ஆணையின் காரணமாக காலிமுகத்திடலில் குவிந்த குண்டர்கள் - நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகளை கண்மூடித்தனமாகத் தாக்கிக் காயப்படுத்தினர்.

இந்தத்தாக்குதலின் எதிரொலி கொழும்பிலும், புறநகர்ப் பகுதிகளில் சில மணிநேரமும் இங்னியாகல, அம்பாறையில் பல நாட்களாகவும் கேட்டது. அம்பாறையிலும், இங்கினியாகலயிலும் குடியேறிய தமிழர்கள் உடமைகளை இழந்தனர். சிலர் உயிர்ப்பலியும் கொடுத்தனர். தமிழர்கள் அம்பாறை, இங்கினியாகலயிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சிங்களம் மட்டும் மசோதாமீதான விவாதம் நாடாளுமன்றத்தில் அவசர அவசரமாக நடைபெற்றது. விடியவிடிய நடந்த விவாதத்தின் போது டொக்டர் என்.எம்.பெரேரா, டொக்டர் கொல்வின் முதலிய லங்கா சமசமாச கட்சித் தலைவர்களும் டொக்டர் எஸ்.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன் போன்ற இலங்கைக் கம்னியூஸ்ட் கட்சித் தலைவர்களும் பிரதிநிதிகளும் எதிர்த்து வாதாடினர். தமிழ் காங்கிரஸ் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், தமிழரசுக் கட்சித் தலைவர்கள், கம்னியூஸ்ட் கட்சிப் பிரதிநிதி பொன்.கந்தையா மற்றும் பிரதிநிதிகளும் கடுமையாக எதிர்த்து வாதாடினர். அடங்காத்தமிழன் செ.சுந்தரலிங்கம் இந்த மசோதாவுக்குத் திருத்திய பிரேரணைக்குக் கொண்டு வந்தார். மசோதாவை பத்து வருட காலத்தின் பின் விவாதத்துக்கு எடுக்க வேண்டுமென்றும் பிரேரணை கொண்டு வந்தார். முடிவில் மறுநாள் காலையில் விவாதம்



முடிவடையும் தறுவாயில் அரசுக்கு எதிராகத் தாம் போர்ப்பிரகடனம் செய்வதாகவும சுந்தரலிங்கம் உரக்கச்சத்தமிட்டார்.

தமிழர் தாயகமான வட்க்கு - கிழக்கு பிரதேசத்திலிருந்து நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகித்த தமிழ் - முஸ்லிம் பரதிநிதிகளும், இடது சாரிகளுக்கும் எதிர்த்து வாதாடி, எதிர்த்து வாக்களித்த போதிலும் பெரும்பான்மை ஜனநாயகம் பண்டாரநாயக்கவின் சிங்களம் மட்டும் மசோதாவை நிறைவேற்றியது.

இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ் சேனநாயக்க காலத்திலிருந்து இன்றுவரை இலங்கையிலுள்ள சகல இன, மத, மக்களுக்கும் அவர்களுடைய உரிமைகளை வழங்கி வருவதாகவே கூறிவருகின்றனர்.

1956 ஆம் ஆண்டில் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அளித்த ஆணையை ஏற்று சிங்களம் மட்டும் என்ற மசோதா நிறைவேற்றப்பட்டது. அதேசமயம் - தமிழர் தாயகத்தில் தமிழ் மக்கள் தங்கள் பிரதிநிதிகளுக்கு அளித்த ஆணையை பெரும்பான்மைச் சமூகம் ஜனநாயகம் என்ற பெயரில் நிராகரித்தது.

1956 ஆம் ஆண்டில் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து சாத்வீகப் போராட்டங்களின் மூலம், இழந்த உரிமைகளையும் பெறுவதற்கு தமிழ் மக்கள் முன்வந்தனர்.

சாதவீகப் போராட்டங்கள் ஆயுதப் படைகளினாலும், குண்டர்களினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டன. போதாக்குறைக்கு 1958 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டுவரை காலத்துக்குக் காலம் தென்னிலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டு, தமிழ் மக்களின் உடமைகளும் உயிர்க ளும் அழிக்கப்பட்டன. தமிழர்கள் அகதிகளாக் கப்பட்டனர்.

இதன் பின்னரே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தூக்கிப்போராடத் தொடங்கினர். வேலுப்பிள்ளை பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தில் பெருமளவு வெற்றியீட்டி இன்று தமிழீழத்தின் ஒரு பகுதி புலிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

**1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க செய்த அதேதவறை, அவர் பின் வந்தவர்கள்- தமிழ்மக்களின் ஆணைகளை நிராகரித்த அதேதவறை இப்பொழுது சந்திரிகா - ஜே.வி.பி கூட்டாட்சி செய்யப்போகிறதா?**

இந்தநிலையில்தான் ரணில் விக்கிரமசிங்கவின் அரசு - புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, போர்நிறுத்தம் செய்தது. புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்டது. இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சுமுகமான தீர்வுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இனப்பிரச்சினை தீர்வுக்குமுன் பாதிக்கப்படட தமிழர் தாயக மக்களுக்கு புனர்வாழ்வும், புனரமைப்பும் அளிப்பதற்கு தன்னாதிக்க அதிகார சபை ஒனறு அமைக்கப்படவேண்டும் என்று புலிகள கோரினர். இதற்கான வரைபொன்றையும் அவர்கள் தயாரித்து அரசிடம் கொடுத்தனர்.

இந்தநிலையில்தான் அதிபர் சந்திரிகா நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

இலங்கையின் 13 ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மையில்லாமல் முடிந்திருக்கிறது. ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்து சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்க ஆயத்தமாகிவிட்டது. பேரம்பேசுதலும், கட்சிகளைக் கூட்டுச் சேர்க்கும் முயற்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதேசமயம் தமிழர் தாயக மக்கள் தங்கள் ஏகப்பிரதிநிதிகள். பிரபாகரன் தலைமையிலுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளே என்பதைச் சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபித்துள்ளனர்.

இந்தநிலையில் இனப்பிரச்சினைகு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணவேண்டும் என்று சந்திரிகாவும் அவரது கூட்டாளிக் கட்சிகளும் பேசத்தொடங்கியுள்ளனர்.

விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாதென்ற குரல் சந்திரிகாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பியிடமிருந்து வருகிறது. இதேசமயம் தமிழர் தாயகம் என்று ஒன்று இல்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்தநிலையில் ஒஸ்லோமாநாட்டு சமஷ்டிக்கான முயற்சி, தன்னாதிக்க அதிகாரசபை விவகாரங்கள் கிடப்பில்போய் மீண்டும் பேச்சுவார்த்தை, பேச்சுவார்த்தை என்று பேசுவதால் இனப்பிரச்சினைக்கு தீர்வோ, சமாதானமோ கிடைத்துவிடுமா?

1956 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க செய்த அதே தவறை, அவர் பின் வந்தவர்கள்- தமிழ்மக்களின் ஆணைகளை நிராகரித்த அதேதவறை இப்பொழுது சந்திரிகா - ஜே.வி.பி கூட்டாட்சி செய்யப்போகிறதா?

சந்திரிகா, ஜே.வி.பி. கூட்டணிக்குச் சிங்கள மக்கள் அளித்த ஆணையைப் போன்றே, தமிழ்மக்களும் தமது பிரதிநிதிகளுக்கு ஆணையை வழங்கியிருக்கின்றனர்.

பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை சர்வதேசத்துக்கு உறுதிபடச் சொல்லியிருக்கின்றார்கள். இனியும் பேச்சு வார்த்தை ஜனநாயகம் பன்முகத் தன்மை என்று பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன் இடைக்கால தன்னாதிக்க அதிகார வரைபை ஏற்றுக்கொள்ளவேண்டும். அல்லது அதிகம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலில் புனர்வாழ்வுக்கு வழிகாணவேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தத் தேர்தலிலும் நிலையான உறுதியான, நிரந்தரமான அரசு நிலைகொள்ள சிங்கள மக்கள் வழிகாணவில்லையே!

இப்பொழுது இடைக்கால தன்னாதிக்க அதிகாரசபையை உருவாக்கி, தமிழ் மக்கள் புனர்வாழ்வு பெற வழிகாணலாம்.

நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இனிவரும் பொதுத் தேர்தலிலாவது சிங்கள மக்கள்வழி காண்பார்களா பார்ப்போம்!

**இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு இந்தத் தேர்தலிலும் நிலையான, உறுதியான, நிரந்தரமான அரசு நிலைகொள்ள சிங்கள மக்கள் வழிகாணவில்லையே!**

## வாக்களிப்பு ஏற்பாட்டாளர்களுக்கு கிளிநொச்சி அரசஅதிபர் நன்றி தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 55 வீதத்திற்கு மேற்பட்ட வாக்காளர்களை வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பி வைப்பதில் பெரும்பங்காற்றி முகமாலைக்கு வந்து சகல வாக்குகளையும் ஒழுங்கமைத்த கிளிநொச்சி மாவட்ட கிராமசேவையாளர்களுக்கும், இதற்கான நடவடிக்கைகளுக்கான இணைப்பு வேலைகளை மேற்கொண்ட உதவி அரச அதிபர்கள், பொது அமைப்புக்கள், நலன் விரும்பிகள் மாவட்டச் செயலகத்தினதும் உதவி அரச அதிபர் செயலகத்தின் பணியாளர்கள் அனைவருக்கும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் வாக்காளர்களுக்கான பிரயாணத்தினை நல்ல முறையில் ஒழுங்குபடுத்திய தமிழீழ போக்குவரத்துக் கழகம், கிளிநொச்சி மாவட்ட பாரவூர்தி சங்கத்தினர், சிற்றூர்தி உரிமையாளர்கள், உந்துளி உரிமையாளர்கள், உழவுஇயந்திர உரிமையாளர்கள் அனைவருக்கும் இதனை நல்லமுறையில் செயற்படுத்திய பொது அமைப்புக்கள் நலன் விரும்பிகளுக்கும், அதற்குமேலாக முதலாம் திகதி பளை முகமாலைப் பகுதியில் பெருமளவு மக்கள் தங்கி நின்று வாக்களிக்கக்கூடிய வகையில் உணவு, குடிநீர் வசதிகளை வழங்கிய பொது அமைப்புக்கள், கூட்டுறவுச்சங்கங்கள, கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், தேவாலயங்கள், பாடசாலைச் சமூகத்தினர், தோட்ட உரிமையாளர்கள் அனைவருக்கும் எனது சிறப்பான நன்றிகள்.

அவர்களது வெளிக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் 5 நாட்களுக்கு மேலாக இரவு பகலாக 200 இற்கு மேற்பட்ட தற்காலிக கழிப்பறைகளை அமைத்து உதவியதுடன், அவற்றுக்கான நீர் வசதி, அதனைவிடப் பொதுமக்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு ஒக்ஸ்பாம் நிறுவனத்திடமிருந்து பெற்ற பிளாஸ்ரிக் கொள்கலன்கள் மூலம் நீர் வசதி செய்து உதவியதுடன், இவற்றின் செயற்பாட்டினை உறுதி செய்யும் வகையில் தொடர்ந்தும் சமுகமளித்து உதவியதை என்னால் என்றும் மறக்கமுடியாது.

இதுபோன்று கரைச்சிப் பிரதேசசபை, பூநகரி பிரதேசசபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஆகியனவும் இந்த மக்களுக்கான தேவைகளை ஈடுசெய்வதில் பெரும் பங்காற்றியுள்ளார்கள்.

வாகன போக்குவரத்து நெருக்கடிகளை தீர்ப்பதில் காவல்துறையினர் மாபெரும் பங்காற்றினர். மக்களுக்கான தாகசாந்தி உட்பட சகல உதவிகளையும் பொது அமைப்புக்கள் முன்னின்று செய்தன. அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் முகமாலையில் கடமையாற்ற வந்த சகல ஊழியர்களுக்கும் தங்குமிடமளித்து உபசரித்த பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர், அந்தப் பிரதேச கிராமசேவையாளர்களும் பாராட்டுக்கும், நன்றிக்கும் உரியவர்கள்.

இதேநேரத்தில் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் கிளிநொச்சி மருத்துவமனையினர், பளை மருத்துவ மனையினர், வைத்தியர்கள், ஊழியர்கள் ஆற்றிய மருத்துவப் பணியினையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளையினர் ஆற்றிய மருத்துவப் பணிக்கும், நடமாடும் சங்கத்தின் மருத்துவ பிரிவினருடைய மகத்துவ சேவைக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மலாக்கா நீரிணையில்
# அமெரிக்க கடற்படை ரோந்துக்கு மலேசியா அரசு அனுமதி மறுப்பு!



மலாக்கா நீரிணையில் பயங்கரவாதிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக அப்பிரதேசத்தில் ரோந்துப்பணிகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கா உதவமுடியும் என்ற கருத்தினை மலேசியா ஏற்றுக்கொள்வதற்கு மறுத்துள்ளது.

அமெரிக்காவின் பசுபிக் பிராந்தியத்திற்கான படைத்தளபதி தோமஸ் பாகோ -அமெரிக்க கடற்படையினர் மலாக்கா நீரிணையில் ரோந்துப்பணிகளை மேற்கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பாக சிங்கப்பூருடன் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா மேற்கொண்டு அந்த நாட்டின் சம்மதத்தையும் பெற்றிருந்தது. ஆனால், மலேசியாவின் கருத்துக்களை அறிந்துகொள்ளவில்லை.

ஆனால், இவ்விடயம் தொடர்பாக மலேசியாவுடன் - அமெரிக்கா தொடர்பு கொண்டிருத்தல்வேண்டும் என மலேசியாவின் உதவிப் பிரதமர் நஜீப் ருன் ரசாக கருத்துத் தெரிவித்தார்.

மேலும் நீரிணை சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா ஆகிய நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தை சர்வதேச பயங்கரவாதத்தின் இரண்டாவது தளமென அமெரிக்கா கருதுவதாகவும், இதனால் இந்தோனேசியா, மலேசியா போன்ற முஸ்லிம்கள்வாழும் நாடுகளில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுக்கு அதிகளவிலான மதிப்புக்கிடையாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.




## காத்மண்டு பொலிஸ் நிலையம் மீது
# மாவோ போராளிகள் தாக்குதல் ஒன்பது பொலிஸார் பலி!



நேபாளத்தின் கிழக்குப் பகுதியில் பொலிஸ நிலையமொன்றின் மீது மாவோ தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 9 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை தலைநகர் காத்மண்டுவிலிருந்து 200 மைல்கள் கிழக்கில் அமைந்துள்ள கிராமமொன்றில் மேற்கொள்ளப்பட்ட பிறிதொரு தாக்குதலில் 20 பொதுமக்கள் காணாமற்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் மாவோ போராளிகளின தரப்பில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தெரியவரவில்லை இதேவேளை பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற தாக்குதலில் காணாமற்போயுள்ள பொலிஸாரைத் தேடும்பணியில் அரச படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகர் காதமண்டுவில் ஜனநாயக ஆட்சி அமைக்கப்படவேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட் டங்கள் நடத்தப்படும்வேளையில், பொலிஸ் நிலையத்தின்மீது தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மன்னர் கஜேந்திரா 2002 ஆம் ஆண்டு தேர்தல்மூலம் அமைக்கப்பட்டிருந்த அரசொன்றை நீக்கியபின் தனக்கு விசுவாசமானவர்களை நியமித்திருந்தார்.

1996 ஆம் ஆண்டிலிருந்து மாவோ போராளிகள் கம்யூனிச அரசொன்றை நிறுவுவதற்குப் போராடிவருகின்றனர். இதுவரை இப்போரில் 9000 வரையான மக்கள் உயிரிழந்துள்ளனர்.

## பத்து ஆண்டுகளின் முன்னர்
# ருவாண்டாவில் நடந்த படுகொலைகளை சர்வதேச சமூகம் தடுக்க தவறிவிட்டது!
## அந்நாட்டு ஜனாதிபதி குற்றச்சாட்டு



10 ஆண்டுகளுக்கு முன்னர் ருவாண்டாவில் நடைபெற்ற மனிதப்படுகொலைகளைத் தடுப்பதற்கு சர்வதேச சமூகம் தவறியுள்ளதாக அந்நாட்டின் தற்போதைய ஜனாதிபதி போல் ககமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ருவாண்டாவின் தலைநகர் சிகாலியில் இந்த மனிதப்படுகொலைகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கென ஒழுங்குசெய்யப் பட்ட கூட்டத்தின் ஆரம்ப உரையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது-

1994 ஆம் ஆண்டு ருவாண்டாவில் நடைபெற்ற மனிதப்படுகொலைகளில் ருட்சி இனத்தைச் சேர்ந்த 800,000 மக்கள் குட்டு இனப் போராளிகளினால் கொல்லப்பட்டிருந்தனர். இந்த மனிதப்படுகொலைகள் சர்வதேச சமூகத்தின் தவறுகளால் நடைபெறுவதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், பலம்வாய்ந்த நாடுகள் இனவாதக் கருத்துக்களினாலும், தோல் நிறத்தைக் கொண்டும் ஒரு இனத்தை ஒடுக்குவதை தான் வெறுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இனப்படுகொலைகள் நிகழ்த்தப் பட்டவேளையில், தற்போதைய ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் சர்வதேச சமாதானப் படைக்கு தலைமை வகித்திருந்ததையும், மனிதப் படுகொலைகளைத் தடுப்பதற்கு தவறியிருந்ததை ஏற்றுக்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாநாடு தொடர்பாக பி.பி.சி செய்தியாளர் ரோபேட் வாக்கர் தெரிவித்த கருத்தில்-

இரு நாட்கள் தொடரவுள்ள ஒன்றுகூடலில் மனிதப் படுகொலைக்கான காரணங்களை ஆராய்வதற்கும், இவ்வறான படுகொலைகள் வேறு நாடுகளில் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கும் திட்டமிட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

## உலகின் மிகப்பெரிய விமானசேவையை
# எயார் பிரான்ஸ், கே.எல்.எம் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கத் தீர்மானித்துள்ளன




(பாரிஸ்)

பிரான்ஸின் விமானசேவையான எயர் பிரான்ஸும், நெதர்லாந்தின் விமானசேவையான கே.எல்.எம் இணைந்து உலகின் மிகப் பெரிய விமானசேவையை உருவாக்கவுள்ளன.

பிரான்ஸின் விமானசேவையினால் ஆசிய நாடுகளிடையே மேற்கொண்ட சேவைகள் சார்ஸ் நோயினால் சிறிதுகாலம் பாதிப்படைந்திருந்தது. பிரான்ஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் விமானசேவைகள் ஒன்றிணைந்தாலும், வெளிநாட்டு விமான நிலையங்களில் நெதர்லாந்தின் கே.எல்.எம் இறங்குவதற்கான உரிமை உண்டெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்றிட் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களே பொலிஸாரின் முற்றுகையில் உயிரிழந்தவர்கள்
## புலனாய்வாளர்கள் தெரிவிப்பு



ஸ்பானிய குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களே தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக புலன்விசாரணையை மேற்கொள்பவர்கள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலில் - குண்டுத் தாக்குதல் குழுவின் தலைவர் சேர்கனி பென் அப்துல் மஜித் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தத் தாக்குதலில் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டதுடன், 11 பேர்வரை காயமடைந்தனர். இதனிடையே இறந்தவர்களில் மற்றுமொருவரான மொரோக்கோவைச் சேர்ந்த அப்டெனாபி கஉன்ஜாவும் குண்டுவெடிப்பு தொடர்பாக தேடப்படுபவர்களில் ஒருவர் என ஸ்பானிய உள்நாட்டமைச்சர் ஏன்ஜெல் சரபி தெரிவித்தார்.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்றாவது சந்தேகத்திற்கிடமானவர் அசரி ரபாட் - தேடப்படுபவர்களின் பட்டியலில் காணப்படவில்லை எனவும், நான்காவது சந்தேகத்திற்கிடமானவர் வெடிபொருட்கள் இடைப்பட்டியில் கட்டியிருந்ததற்கான ஆதாரங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் மட்றிட் தாக்குதலில் பாவிக்கப்பட்டதுபோன்ற வெடிபொருட்களை கைப்பற்றியிருந்ததாகவும், 10 கிராம் வரையான டைனமற் கைப்பற்றப்பட்டதாகவும், இதன்மூலம் மேலும குண்டுத்தாக்குதலுக்கு இறந்தவர்கள் திட்டமிட்டிருந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்தோனேஷியாவில் 4 தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளன!

இந்தோனேசியாவில் நான்கு தேர்தல்கள் ஒரே நேரத்தில் நடைபெறவுள்ளது. உலகிலுள்ள தேர்தல் நடைமுறைகளில் மிகவும் சிக்கல்மிக்கதாக இந்தத் தேர்தல் கருதப்படுகிறது.

ஒரே நாளில் நடைபெறும் தேர்தல்களில் ஒரு தேசிய அரசாங்கத்திற்கும் மூன்று உள்ளூர் நிர்வாகத்திற்கும் அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

14 ஆயிரம் தீவுகளையும், 147 மில்லியன் வாக்களர்களையும் கொண்ட இந்தோனேசியாவில தேர்தலை ஒரே நாளில் நடத்துவது சிரமமான காரியம் எனவும் -

இந்தோனேசியாவில் 5 லட்சத்து 95 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் 24 கட்சிகளில் 550 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். இந்தோனேஷியாவின முன்னாள் ஜனாதிபதி சுகாட்டோ - முபபது ஆண்டுகள் தன்னாட்சி நடத்தியிருந்தார். இவரது கட்சியான கொல்கார் மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்திருப்பதாக கருத்துக் கணிப்புகளில் அறியக்கூடியதாக உள்ளது.

பொருளாதாரம், நாட்டின் பாதுகாப்பு, ஆகியவற்றினால் பல பிரச்சினைகள் இந்தோனேஷி



யாவில் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய ஜனாதிபதி மேகவதி - தேர்தல் வாக்குறுதிகளில் தெரிவித்த கருத்துக்களை செயற்படுத்தத் தவறியுள்ளமையால் மக்கள் மத்தியில் நம்பிக்கையை இழந்துள்ளதாகவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி மேகவதி ஜூலை மாதம் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகவும், அவரது வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் குறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்த பலம்வாய்ந்த அரசு அமைக்கப்படும்!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கான பலம் வாய்ந்த கூட்டணி அரசாங்கம் ஒன்று விரைவில் ஏற்படுத்தப்படுமென்று ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கடுவெலவில் கூட்டம் ஒன்றில் உரைநிகழ்த்தியபோதே, விமல் வீரவன்ச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய அரசாங்கத்தைப் பாதுகாத்து அதனிடமிருந்து ஆகக்கூடுதலான பயனைப் பெற்றுக்கொள்வதே மக்களின் கடமையும் பொறுப்புமாகும்.

தென்பகுதியில் வாழும் மக்கள் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பலத்த ஆதரவைத் தெரிவித்துள்ளனர். முன்னணிக்கு 14 மாவட்டங்களில் வெற்றி கிடைத்துள்ளது.

தேர்தல் தொகுதி அடிப்படையில் இந்த வெற்றி கணிப்பிடப்படுமானால் 108 ஆசனங்களைக் கைப்பற்றியிருக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் அமுல்செய்யப்பட்ட திட்டத்தை மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்ற அமர்வு 22 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

13 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்திருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் ப்ரியாணி விஜயசேகர தெரிவித்தார்.

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் விபரங்கள் தேர்தல் ஆணையாளரிடமிருந்து உத்தியோகபூர்வமாக கிடைக்கப்பெற்றதும் அவர்களுக்கான வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

குறிப்பாக விடுதி வசதி உட்பட பல வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன. புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவை ஏற்படும் பட்சத்தில் விசேட பயிற்சிகளும் வழங்கப்படும் எனவும் நாடாளுமன்ற செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# அல்லைப்பிட்டியில் சோதனை தீவிரம்!

(மண்கும்பான்)

யுத்த நிறுத்த ஒப்புந்தத்தைத் தொடர்ந்து தளர்த்தப்பட்டிருந்த சோதனை நடவடிக்கைகள் மீண்டும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடிப் பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து - தீவகம் செல்லும் பயணிகளே சோதனையிடப்பட்டு வந்தனர். ஆனால், தற்பொழுது பயணிகள் குடாநாட்டுக்குத் திரும்புகையிலும் படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேசமயம் தீவகத்திற்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பெண்களும், ஆண் கடற்படையினரால் சோதனையிடப்படுவதால், அவர்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (53)

## 22 தமிழ் அகதிகள் மன்னார் திரும்பினர்

(மன்னார்)

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்திருந்த 22 ஈழத் தமிழர்கள் மன்னாரை வந்தடைந்தனர்.

காமராஜர் மாவட்டம் - ராஜபாளையம் அகதி முகாமில் தங்கியிருந்த இவர்கள், சிறிய படகு ஒன்றின் மூலம் ராமேஸ்வரம் ஊடாக மன்னாரை வந்தடைந்தனர்.

வந்தடைந்த இவர்கள் சுயமாகவே தமது சொந்த இடங்களுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசுக் கட்சி கூடவுள்ளது

இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்றக் குழு, இன்று கொழும்பில் கூடித் தமது செயற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைக்கவுள்ள புதிய அரசுடன் எவ்வாறு செயற்படுவது என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படவுள்ளது.

# தேசியப்பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை அறிவியுங்கள்!

## தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

தேசியப் பட்டியலில் தெரிவுசெய்யப்படவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை அறிவிக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளர்களைக் கோரியுள்ளதாக தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தேசியப் பட்டியல் மூலம் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டவுடன், தேர்தல் ஆணையாளர் இந்தமுறை பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை வர்த்தமானி மூலம் அறிவிக்கவுள்ளார்.

இதற்கான நடவடிக்கை ஒரு சில தினங்களுக்குள் எடுக்கப்படும் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மட்டக்களப்பில் சூடு; இளைஞர் படுகாயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் மாமாங்கம் பகுதியில் பொதுமகன் ஒருவர் இனந்தெரியாத குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுமாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் நடந்த இந்தச் சம்பவத்தில் கருவேப்பங்கேணி வீடமைப்புத் திட்டத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகுமார் (வயது 30) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

வலது தோள்மூட்டிலும், இடது உள்ளங்கையிலும் காயமடைந்த இவர் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை, இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, இவருடன் கூடச் சென்ற மற்றொருவர் காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் முன்னர் புளொட் அமைப்பில் இருந்து பின்னர் இராணுவத்தினருக்கு தகவல்களை வழங்கும் ஒருவராக இருந்தவர் எனவும் கூறப்படுகின்றது.

# தேர்தலில் பக்கச்சார்பாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை

பொதுத்தேர்தலில் பக்கச் சார்பாக கடமையாற்றிய சில பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளே இவ்வாறான முறைப்பாடுகளை முன்வைத்துள்ளதாக தேர்தல் செயலகத்தின் பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்தின தெரிவித்தார்.

சில பொலிஸ் அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்படுவதாக அந்த முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

பொதுவாக நோக்குமிடத்து சகல பொலிஸ் அதிகாரிகளும் பக்கச்சார்பற்ற வகையில் தமது கடமைகளை மேற்கொண்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய பிரதமராக...

கதிர்காமரை, அடுத்த பிரதம மந்திரியாக இன்று சத்தியப் பிரமாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற ஆரம்பித்திருந்த நிலையில், மஹிந்த ராஜபக்ஷ அதை எதிர்த்ததாகவும், கடும் பதவிப் போட்டியை முடுக்கி விட்டதாகவும் செய்திகள் தெரிவித்தன.

அதைத் தொடர்ந்து, சத்தியப் பிரமாண வைபவம் பின்போடப்பட்டதுடன், மஹிந்தவும், ஜனாதிபதி சந்திரிகாவும் பலமணி நேரம் கலந்துரையாடியதாகவும், பின்னர் ஜனாதிபதி, மஹிந்தவை நாட்டின் புதிய பிரதம மந்திரியாக அறிவித்ததாகவும் தெரியவருகிறது.

1970 ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் தொடர்ந்து செயற்பட்டுவரும் மஹிந்தவுக்கு, சிங்கள மக்களது செல்வாக்கு இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், தம்வசம் 40 ஆசனங்களைத் தக்கவைத்துக்கொண்டு, சந்திரிகாவின் கூட்டணி ஆட்சியமைக்க முக்கிய காரணமாக அமைந்துள்ள ஜே.வி.பி.யினர், மஹிந்த ராஜபக்ஷவை பிரதம மந்திரியாக நியமித்துள்ளமை குறித்து அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரியவருகிறது. ஏற்கனவே, மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பி.யினருக்கும் பலத்த கருத்து முரண்பாடு இருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது...

ஜே.வி.பியின் வரலாற்றில் இது ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்துள்ளது.

அநேகமான மாவட்டங்களில் கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 2 லட்சத்துக்கும் அதிகமான விருப்பு வாக்குகளுடன் விமல் வீரவன்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள அதேவேளை,

15 இற்கு மேற்பட்ட ஆசனங்களைப் பெற்றால் தேசியப் பட்டியலில் நான்கு பேருக்கு இடமளிப்பது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

36 ஆசனங்களை ஜே.வி.பி பெற்றிருப்பதால் 4 தேசியப் பட்டியல் ஆசனங்களும் ஜே.வி.பிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பெரும்பான்மை...

சிக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கிடைக்கவில்லை.

நாடாளுமன்ற ஆசனங்கள் பல கட்சிகளுக்கு இடையே பிரிந்து சென்றுள்ளது. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெரும் சவாலான பிரச்சினையாக அமையுமென நாம் நினைக்கிறோம்.

ஜனாதிபதி சந்திரிகா ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒருவருக்கு பிரதமராகப் பதவிப் பிரமாணம் செய்ய தீர்மானித்துள்ளார். அப்படியானால் பிரதமருக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்காது.

இதனால் நம்பிக்கையற்ற நிலை ஏற்படும். நிலையற்ற அரசு ஒன்று உருவானால், எதிர்காலத்தில் நாட்டில் பல பிரச்சினைகள் ஏற்படும்.

சமாதான நடவடிக்கைகள் நிராகரிக்கப்பட்டதாக நான் கருதவில்லை. இச் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் ஒன்று இருக்க வேண்டும். அதுவே தற்போதுள்ள பிரச்சினை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை காண்பிக்காது எந்தவொரு செயற்பாட்டையும் முன்னெடுத்துச் செல்லமுடியாது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலமில்லாத அரசினால் சமாதானச் செயற்பாடல்ல, எந்தவொரு செயற்பாட்டையும் மேற்கொள்ளமுடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சபாநாயகர்...

சபாநாயகராக நியமிக்க வேண்டும் என்றும், அதற்கு தமது கட்சியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமித்தால், அரசு அமைப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்குமெனவும் தெரிவித்துள்ளது.

இந்த சபாநாயகர் நியமனம் தொடர்பாக விரைவில் ஜனாதிபதியைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (01)

# 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்...

ணத்தால் மேலும் பல வீதிகளை மூடி மக்களை அப்பகுதிகளிலேயே இருந்து நிகழ்வுகளைப் பார்ப்பதற்கான ஒழுங்குகளைப் பொலிசார் செய்தனர்.

சுவிற்ஸர்லாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க், நோர்வே, ஹொலன்ட் என ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த மக்களுடன் தன்சானியா, தென்னாபிரிக்கா, மலேசியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலிருந்தும் பலர் பொங்கு தமிழ் நிகழ்வுக்காக வருகைதந்தனர்.

இவ்வாறு வருகை தந்த மக்கள் தமிழீழத் தேசியக் கொடியுடன், தாம் வசிக்கும் நாடுகளின் கொடிகளையும் ஏந்தி வந்தது ஊர்வலத்தின் கண்கொள்ளாக்காட்சியாக அமைந்தது.

நிகழ்வில் பங்கேற்ற மக்கள் அனைவரும் தமிழீழத் தேசியத் தலைவரின் படத்தை ஏந்தியபடி வந்தனர்.

ஆரம்பத்தில் 15 ஆயிரம் பேர் கலந்துகொண்டதாகவே கணிக்கப்பட்டாலும் இறுதியில் வந்து இணைந்த மக்கள் கூட்டம் அந்தத் தொகையை மேலும் அதிகரித்தது.

பேரணி நிறைவில் தமிழீழத்திலிருந்த வந்திருந்த தலைவரின் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் ருத்திரகுமாரன் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய மூத்த உறுப்பினர் கரிகாலன்-

மட்டக்களப்பில் நடந்துவிட்ட வரலாற்றுத் துரோகத்தை விவரித்ததோடு, லட்சம் படையினராய் மணலாறில் சுற்றி நின்ற இந்திய வல்லரசுப் படையையே விரட்டியடித்த எம் தலைவரிடம் இந்தத் துரோகங்கள் பலிக்கப் போவதில்லை என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் -

தமிழீழ விடுதலைப் போராட்டத்திலும் தமிழீழ அரசு கட்டமைப்பிலும் புலம்பெயர் தமிழர்கள் ஆற்றிய பங்கையும், அண்மை துரோக நிகழ்வுகளால் புலம்பெயர் தமிழர்கள் பட்ட துயரங்களை அறிந்தே தலைவர் தங்களை ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்ததையும் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச சட்ட ஆலோசகர் ருத்ரகுமாரன் ஆற்றிய 20 நிமிட உரையில், புலம்பெயர் தமிழ் மக்களுக்கு அரிய அரசியற்பாடமாக இருந்தது.

உலக நாடுகளின் உரிமைப் போர்களில் குறுக்கிட்ட பிரதேசவாதங்களை பட்டியலிட்டு அவை மண்ணோடு மக்கிப்போனதை சுட்டிக்காட்டியது தமிழ் மக்களுக்கு கூடுதல் நம்பிக்கையை உருவாக்கியிருந்தது.

சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ள சுயநிர்ணய உரிமைக்கு தமிழர்கள் உரித்தானவர்களே என்பதையும் ருத்திரகுமாரன் விளக்கமாக கூறினார்.

அருட்தந்தை கலாநிதி எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகளார் பேசுகையில் -

சிங்கள பேரினவாதத்தை மட்டும் எதிர்த்து நாங்கள் போராடவில்லை. நம் மக்களிடையே உள்ள அடிமைத்தனங்களை மதம், பால், பிரதேச ரீதியிலான மனோ நிலைகளையும் ஒழிக்கவே எமது இயக்கம் போராடுவதாக தேசியத் தலைவர் தன்னிடம் கூறியிருந்ததை நினைவு கூர்ந்தார்.

இந்த நிகழ்வில் - யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சிதம்பரநாதன் உள்ளிட்டோர் உரையாற்றினர். இந்த நிகழ்வுக்கு முன்னதாக நேற்றுகாலை செய்தியாளர்கள் சந்திப்பு நடந்தது.

CCS
College of Computer Studies
புதிய பிரிவுகள் ஆரம்பம்
07-04-04
- Ms Office
- Programming
- Desk Top Publishing
சிறுவர்களுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பம்
Future Kids
10-04-04
302/1, Navalar Road,
Anaipanthi,
Jaffna.
Tel: 0777-279034
0214-590086

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.